# திருக்குறள் ஆய்வுக் கையேடு

## தொகுப்பு ஒன்று




வெளியீடு :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

# திருக்குறள் ஆய்வுக் கையேடு

## 2019



தொகுப்பாளர்

**பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி**

ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர்

கக்சுயின் பல்கலைக்கழகம்

யப்பான்

| | |
|---|---|
| தலைப்பு: | திருக்குறள் ஆய்வுக் கையேடு |
| தொகுப்பாளர்: | பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி |
| உரிமை: | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| பதிப்பு: | முதற்பதிப்பு - 2019 |
| பக்கங்கள்: | 125 |
| பிரதிகள்: | 1000 |
| வெளியீடு: | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| அச்சுப்பதிப்பு: | எவகிறீன் அச்சகம்<br>இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே. 021 221 9893 |

| | |
|---|---|
| Title : | Tirukkural Ayvuk Kaiyeetu<br>(A Hand book for Tirukkural Research) |
| Compiler : | Professor Dr. S. Manonmani |
| Copyright : | Professor A. Sanmugadas |
| Edition : | First Edition - 2019 |
| Copies : | 1000 |
| Pages : | 125 |
| Published by: | Dept of Cultural affairs,<br>Ministry of Education,<br>Cultural affairs, Sports and Youth affairs,<br>Northern Province |
| Printed at: | Evergreen Printers,<br>693, K.K.K. Road, Jaffna<br>Tel. 021 221 9893 |

# தொகுப்புரை

தமிழில் தோன்றிய செவ்விலக்கியங்களில் "திருக்குறள்" இன்று உலகம் அறிந்த நூலாக உள்ளது. பல மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்ட பெருமை யுடையது. திருக்குறள் சிறுவர் முதல் முதியோர் வரை எல்லோரும் படிக்க வேண்டிய பொது நூல். பள்ளிகள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை பாட நெறியிலே இணைக்கப்படப் பொருத்தமான நூலாகும். எனவே இந்நூல் பற்றிய செய்திகளைத் தொகுப்பதும் காலத்தின் தேவையாக உள்ளது. திருக்குறள் உலகின் மிகச் சிறிய பாட்டு. வெண்பாவால் அமைந்தது. ஈரடிகளைக் கொண டது. செப்பல் ஓசையுடையது. ஆனால் சிறிய பாடலில் மிக ஆழமான பொருளை உள்ளடக்கியது.

திருக்குறளை இயற்றியவருடைய பெயர் நூலில் எங்குமே பதிவு செய்யப்பட வில்லை. அவருடைய வாழ்க்கை வரலாறும் இன்னமும் முழுமையாக எழுதப் படவில்லை. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய திருக்குறள் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் நூலாகும். மனிதனை நல்ல வனாக வல்லவனாக ஆக்குவதற்கு வள்ளுவர் வழிகாட்டியுள்ளார். மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ள திருக்குறளை "முப்பால்" எனச் சிறப்பாக அழைத்தனர். 1330 குறள் வெண்பாக்களைக் கொண்டு 133 அதிகாரங்களாக இந்நூல் வகுக்கப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம் என்னும் மனித வாழ் வியலுக்கு உறுதுணையாக அமைய வேண்டிய எண்ணக்கருக்களை வள்ளுவர் மிக விரிவாக நூலிலே விளக்கியுள்ளார். ஒவ்வொரு அதிகாரத்திலும் தான் கூற வந்த செய்திகளைப் பத்துக் குறட்பாக்களில் வகுத்துக் கூறியுள்ளார். அதற்கேற்றவாறு அதிகாரங்களின் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர் கூறவந்த பொருளின் மெலிவு, வலிவு, சிறப்பு என்பவற்றை மிக நுட்பமாகக் குறளிலே கூறியுள்ளார்.

வள்ளுவர் கூறிய கருத்துகளை இன்று உலகில் எல்லா அறிவியல் துறை யினரும் தத்தமக்கேற்றவாறு இணைத்துப் பார்க்கின்ற முறைமையும் தோன் றியுள்ளது. ஒப்பீட்டு நிலையிலே நோக்கும் நிலையும் உருவாகியுள்ளது. வள்ளுவர் தம்முடைய நூலிலே எந்தச் சமயத்தையும் குறிப்பிடவில்லை. ஆனால் எல்லாச் சமயத்தவரும் தத்தம் நெறியோடு குறளை ஒப்பிட்டு நோக்கத் தலைப்பட்டுள்ளனர். அவருடைய கருத்துகளுக்குரிய மூலத்தைத் தேடுவதற் கும் முனைகின்றனர். வள்ளுவர் தனக்கு முன்னே இருந்த நூல்களைக் கற்றி ருக்க வேண்டும். சிறப்பாக அவர் சங்க இலக்கியச் செய்யுள்களை ஆழமாகப் படித்து அவற்றின் கருத்துக்களையும் தனது குறட் பாக்களிலே பயன்படுத்தியிருப் பதை நன்கறிய முடிகிறது. சில அடிகளில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று அவர் காலத்துப் பிறமொழிநூல்களின் கருத்துகளையும் உள் வாங்கி நூலை இயற்றுவதற்கும் அவர் முயற்சித்திருக்கலாம்.

எனினும் திருக்குறள் தமிழ்மொழியின் வளத்தையும் தனித்துவத்தையும்

மிக நேர்த்தியாகப் பதிவு செய்துள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. வள்ளுவர் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ள முறைமை இதற்குச் சான்றாக உள்ளது. குறட்பாக்களிலே அவர் பயன்படுத்தி உள்ள சொற்கள் இன்று பல வழக்கொழிந்து விட்டன. அவற்றிற்கு மாற்றீடாகப் பிற மொழிச் சொற்கள் இன்று பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இன்று திருக்குறளில் பயன்படுத்தப்பட்ட சொற்களின் பொருள் விளக்கம் அற்றதாகப் பலரால் கருதப்பட இடமேற்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றப் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த திருக்குறள் ஆய்வுத் தொகுப்பு முயற்சி இத்தகைய இலக்கை முன்னிறுத்தியே செய்யப்பட்டுள்ளது. ஒரு தமிழ்ச் சொல்லின் பொருளைக் கூர்மையை விளக்க வள்ளுவர் அச்சொல்லை ஒரு குறளிலேயே பலமுறை பயன்படுத்தியுள்ளார். எடுத்துக் காட்டாகப் பின்வரும் குறளைக் காட்டலாம்.

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை." (குறள்:411)

இக்குறளில் "செல்வம்" என்னும் சொல் ஐந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வள்ளுவருடைய சொற்பஞ்சத்தைப் புலப்படுத்துவதாகப் பலரும் எண்ணலாம். ஆனால் குறளின் முழுமையான பொருளை ஆழமாக உற்று நோக்கும் போது வள்ளுவரின் நுண்மாண்நுழை புலத்தை உணர முடிகிறது. செல்வத்துள் சிறந்த செல்வத்தைக் கூறவந்த வள்ளுவர் அது எது என்பதையும் அது எத் தகையது என்பதையும் தெளிவாகக் கூறியுள்ளார். முதலிலே உலகிலே நாம் செல்வம் என எண்ணுகின்றவற்றுள் முதன்மையான செல்வத்தைக் குறிப்பிட்டுள்ளார். செவியால் நாம் கேட்டறியும் அறிவே செல்வங்களில் சிறந்தது. அதனால் அதுவே எல்லாச் செல்வங்களிலும் முதன்மையானதாகும் என வரையறை செய்துள்ளார். அதற்கு அவர் இட்ட பெயர் "செவிச் செல்வம்" என்பது மனிதன் தொடக்க நிலையிலே குழந்தைப் பருவத்திலிருந்து சேர்க்கும் செல்வ மாகும். எழுத்தின் பயன்பாட்டிற்கு முன்னைய காலத்திலே கேள்வியின் மூலமே கற்கும் நிலையிலிருந்தது. இன்று புதிய கல்விக் கோட்பாடுகள் பல தோன்றிய பின்னரும் கேட்டல் திறனை வளர்க்கப் பல பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அறிவுத் தேட்டத்திற்கு கேட்டல் இன்றியமையாதது. எவ்வித முயற்சியும் செய்யாமல் செவி என்னும் உறுப்பைக் கொண்டு தேடும் செல்வம். பிறசெல்வம் பொருளால் வருவது. நிலையற்றது. அதனைத் தேடும் போதும் பல் வேறு துன்பங்களைத் தருவது. ஆனால் செவிச் செல்வம் எளிதாகத் தேடக் கூடியது. எனவே அதுவே முதன்மையானது என அவர் கூறும்போது செல்வம் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். கேள்வி நிலையில் அச்சொல் நன்கு பதிவாகப் பலமுறை குறளிலே பயன்படுத்தியுள்ளார். இக்குறளிலே ஒரு சிறிய குழந்தையின் அறிவு நிலையிலும் நன்கு விளங்கிக் கொள்ளும் வகையில் நன்கு கவிதையாக்கப்பட்டிருப்பதை நாம் நன்கு உணர வேண்டும்.

திருக்குறள் பற்றிய விரிவான தேடலை மேற்கொள்ள விரும்பும் இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டுவதாக இத்தொகுப்பிலே சொல் நிலையில் குறட் பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இன்னும் புதிய கருத்து நிலையிலே திருக் குறள் பதிவுகளை இணைத்துப் பார்ப்பதற்கும் இத்தொகுப்புப் பயன்படும். வள்ளுவர் பதிவு செய்த பல்வேறு பேச்சு வகைகள் பற்றிய குறட் பாக்களின் தொகுப்பை வகை மாதிரியாகக் கூறலாம். தமிழைச் சிறப்பாகக் கற்கும் வாய்ப் பற்ற பிறதுறையாளர்க்கு இத்தொகுப்புநிலை பெரிதும் பயன்படும். மேலும் இத்தொகுப்பிலே குறள் தொடர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை திருக்குறள் பற்றிய உரைகளை ஆற்றுவதற்கும் கட்டுரை எழுதுவதற்கும், குறிக்கோள் தொடர்களாக விளம்பரத்திலே பயன்படுத்துவதற்கும் துணை செய்யும்.

இவற்றுடன் திருக்குறள் பற்றிய புலமையாளர்களின் கருத்துப் பதிவான திருவள்ளுவமாலையும் இத்தொகுப்பில் அடக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் திருக்குறள் பெற்றிருந்த சிறப்பையும் அவர்கள் பாடிய பாடல்கள் பதிவு செய்து வைத்துள்ளன. இன்னும் குறளின் சிறப்பால் வழங்கப்பெற்ற பெயர்களும் தொடுக்கப்பட்டுள்ளன. திருக்குறளுக்கு எழுதிய பழைய உரையாசிரியர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருக்குறளின் தனிச் சிறப்பியல்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தொகுப்பு முதலாவது தொகுப்பாகும். குறிப்பாக எதிர்கால இளந்தலை முறையினர் இப்பணியைத் தொடர வேண்டும். திருக்குறள் வள்ளுவர் எமக்குத் தந்த அரிய அறிவுக்களஞ்சியம். அக்களஞ்சியம் அள்ளஅள்ளக் குறையாத செல்வம் படைத்தது. காலத்துக்கு ஏற்றவகையில் மக்களையும், சமூகத்தையும், நாட்டையும் நன்னெறிப் படுத்த வல்லது. மனித வாழ்வியலை இயற்கையோடு நன்கு இணைக்க வல்லது. இன்றைய மக்களின் உள்ளத்து ஐயங்களை எல் லாம் தெளிவாக்கும் அறிவுக் கருவூலமாக விளங்குவது. தனிமனிதனாக உல கப் பற்றைத் துறந்து வாழ்வதை விடக் குடும்பமாக, சுற்றமாக வாழ்வதே நல் லது என்பதை நயமாக எடுத்துரைப்பது.

இப்பணியைச் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த முத்தமிழுக்கு முதல் நன்றி கூறவேண்டும். காலத்திற் கேற்ற பணி செய்து இத்தொகுப்பு வெளிவர முன்னின்றவர் எல்லோரும் வாழ்த்துக்குரியவர்கள்.

**தொகுப்பாளர்**
**பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி**
**ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர்**
**கச்சுயின் பல்கலைக்கழகம்**
**யப்பான்**

# அறத்துப்பால் - உள்ளடக்கம்


**01. பாயிரம்**

01. கடவுள் வாழ்த்து
02. வான் சிறப்பு
03. நீத்தார் பெருமை
04. அறன் வலியுறுத்தல்

**02. இல்லறவியல்**

01. இல்வாழ்க்கை
02. வாழ்க்கைத் துணைநலம்
03. புதல்வரைப் பெறுதல்
04. அன்புடைமை
05. விருந்து ஓம்பல்
06. இனியவை கூறல்
07. செய்ந்நன்றி அறிதல்
08. நடுவு நிலைமை
09. அடக்கம் உடைமை
10. ஒழுக்கம் உடைமை
11. பிறன் இல் விழையாமை
12. பொறை உடைமை
13. அழுக்காறாமை
14. வெஃகாமை
15. புறங் கூறாமை
16. பயனில சொல்லாமை
17. தீவினை அச்சம்
18. ஒப்புரவு அறிதல்
19. ஈகை
20. புகழ்

**03. துறவற இயல்**

01. அருள் உடைமை
02. புலால் மறுத்தல்
03. தவம்
04. கூடா ஒழுக்கம்
05. கள்ளாமை
06. வாய்மை
07. வெகுளாமை
08. இன்னா செய்யாமை
09. கொல்லாமை
10. நிலையாமை
11. துறவு
12. மெய் உணர்தல்
13. அவா அறுத்தல்

**04. ஊழ் இயல்**

01. ஊழ்

# பொருட் பால்

| 01. அரசியல் | | | |
|---|---|---|---|
| 01. | இறைமாட்சி | 10. | அவை அஞ்சாமை |
| 02. | கல்வி | 11. | நாடு |
| 03. | கல்லாமை | 12. | அரண் |
| 04. | கேள்வி | 13. | பொருள் செயல்வகை |
| 05. | அறிவுடைமை | 14. | படைமாட்சி |
| 06. | குற்றங்கடிதல் | 15. | படைச் செருக்கு |
| 07. | பெரியாரைத் துணைக் கோடல் | 16. | நட்பு |
| 08. | சிற்றினம் சேராமை | 17. | நட்பு ஆராய்தல் |
| 09. | தெரிந்து செயல்வகை | 18. | பழைமை |
| 10. | வலி அறிதல் | 19. | தீ நட்பு |
| 11. | காலம் அறிதல் | 20. | கூடா நட்பு |
| 12. | இடன் அறிதல் | 21. | பேதமை |
| 13. | தெரிந்து தெளிதல் | 22. | புலவறி வாண்மை |
| 14. | தெரிந்து வினையாடல் | 23. | இகல் |
| 15. | சுற்றந் தழால் | 24. | பகைமாட்சி |
| 16. | பொச்சாவாமை | 25. | பகைத்திறம் தெரிதல் |
| 17. | செங்கோன்மை | 26. | உட்பகை |
| 18. | கொடுங்கோன்மை | 27. | பெரியாரைப்பிழையாமை |
| 19. | வெருவந்த செய்யாமை | 28. | பெண்வழிச் சேறல் |
| 20. | கண்ணோட்டம் | 29. | வரைவின் மகளிர் |
| 21. | ஒற்றாடல் | 30. | கள் உண்ணாமை |
| 22. | ஊக்கம் உடைமை | 31. | சூது |
| 23. | மடியின்மை | 32. | மருந்து |
| 24. | ஆள்வினை உடைமை | **03. ஒழிபியல்** | |
| 25. | இடுக்கண் அழியாமை | 01. | குடிமை |
| **02. அங்க இயல்** | | 02. | மானம் |
| 01. | அமைச்சு | 03. | பெருமை |
| 02. | சொல்வன்மை | 04. | சான்றான்மை |
| 03. | வினைத்தூய்மை | 05. | பண்புடைமை |
| 04. | வினைத்திட்பம் | 06. | நன்றியில் செல்வம் |
| 05. | வினை செயல்வகை | 07. | நாண் உடைமை |
| 06. | தூது | 08. | குடி செயல்வகை |
| 07. | மன்னரைச் சேர்ந்து ஒழுகல் | 09. | உழவு |
| 08. | குறிப்பு அறிதல் | 10. | நல்குரவு |
| 09. | அவை அறிதல் | 11. | இரவு |
| | | 12. | இரவச்சம் |
| | | 13. | கயமை |

# காமத்துப்பால்

| 01. களவியல் | 02. கற்பு இயல் |
|---|---|
| 01. தகை அணங்குறுதல் | 01. பிரிவு ஆற்றாமை |
| 02. குறிப்பு அறிதல் | 02. படர் மெலிந்து இரங்கல் |
| 03. புணர்ச்சி மகிழ்தல் | 03. கண் விதுப்பு அழிதல் |
| 04. நலம்புனைந்துரைத்தல் | 04. பசப்புறு பருவரல் |
| 05. காதற் சிறப்புரைத்தல் | 05. தனிப்படர் மிகுதி |
| 06. நாணுத்துறவு உரைத்தல் | 06. நினைந்தவர் புலம்பல் |
| 07. அலர் அறிவுறுத்தல் | 07. கனவு நிலை உரைத்தல் |
| | 08. பொழுது கண்டு இரங்கல் |
| | 09. உறுப்பு நலன் அழிதல் |
| | 10. நெஞ்சோடு கிளத்தல் |
| | 11. நிறை அழிதல் |
| | 12. அவர் வயின் விதும்பல் |
| | 13. குறிப்பு அறிவுறுத்தல் |
| | 14. புணர்ச்சி விதும்பல் |
| | 15. நெஞ்சோடு புலத்தல் |
| | 16. புலவி |
| | 17. புலவி நுணுக்கம் |
| | 18. ஊடல் உவகை |

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 01. | திருக்குறளுக்கு வழங்கப்படும் பெயர்கள் | 11 |
| 02. | திருவள்ளுவமாலை | 13 |
| 03. | திருக்குறளின் பழைய உரையாசிரியர்கள் | 21 |
| 04. | திருக்குறள் அடிகளைப் பதிவு செய்து வைத்துள்ள நூல்கள் | 21 |
| 05. | திருக்குறளின் தனிச்சிறப்பியல்புகள் | 22 |
| 06. | திருக்குறளின் சிறப்புத் தொடர்கள் | 23 |
| 07. | திருக்குறளில் எண் பயன்பாடு | 27 |
| 08. | திருக்குறளில் வினா | 33 |
| 09. | திருக்குறளில் உணவும் சுவையும் | 35 |
| 10. | திருக்குறளில் நோயும் பிணியும் | 39 |
| 11. | திருக்குறளில் இன்பம் | 41 |
| 12. | திருக்குறளில் துன்ப வகைப்பாடு | 43 |
| 13. | திருக்குறளில் பேச்சு வகைகள் | 49 |
| 14. | திருக்குறளில் பொழுதும் காலமும் | 54 |
| 15. | திருக்குறளில் மக்கள் விளிச் சொற்கள் | 60 |
| 16. | திருக்குறளில் தொழிற் கருவிகள் | 84 |
| 17. | திருக்குறளில் விலங்குகள் | 86 |
| 18. | திருக்குறளில் இயற்கை | 87 |
| 19. | திருக்குறளில் உயிரினங்கள் | 99 |
| 20. | திருக்குறளில் உடலுறுப்புகள் | 101 |
| 21. | திருக்குறளில் உலகம், நிலம் வையம், ஞாலம் | 117 |

# திருக்குறள் சில ஆய்வுத்தகவல்கள்

01. திருக்குறளில் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துகளின் தொகை 42914
02. தமிழ் எழுத்துகள் 247 இல் 37 எழுத்துகள் திருக்குறளில் பயன்படுத்தப்படவில்லை.
03. இடம் பெற்றுள்ள மலர்கள் இரண்டு - அனிச்சம், குவளை
04. இடம் பெற்றுள்ள ஒரேயொரு பழம் - நெருஞ்சிப்பழம்
05. இடம் பெற்றுள்ள ஒரேயொருவிதை - குன்றிமணி
06. பயன்படுத்தப்படாத உயிரெழுத்து - ஒள
07. இடம்பெற்றுள்ள இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
08. அதிகம் பயன்படுத்தப்பட்ட எழுத்து - னி (1705)
09. ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துகள் - ளீ - ஙு
10. இடம் பெறாத எண் - ஒன்பது
11. திருக்குறளில் தமிழ் என்னும் சொல் இடம்பெறவில்லை

**01. திருக்குறளுக்கு வழங்கப்படும் பெயர்கள்**

| **பெயர்கள்** | **பதிவுகள் - அழைத்தோர்** |
|---|---|
| அறம் | புறநானூறு - 34 |
| இரண்டு | பெருந்தொகை - 1128, தனிப்பாடல் திரட்டு - 68 |
| உத்தரவேதம் | ஆறுமுகநாவலர் |
| எழுதுண்ட மறை | கம்பர் - ஏரெழுபது - 19 |
| ஒத்து | சமயத்திவாகர வாமனமுனிவர் - நீலகேசி உரை |
| கட்டுரை | திருக்கயிலாய ஞான உலா - 174 |
| குறளமுது | வள்ளுவர் உள்ளம் 13 புலவர் பொன் கோதண்டராமன் |
| தமிழ்மறை | ச.தண்டபாணி தேசிகர் |
| பொதுமறை | கு.மோகனராசு |
| வான்மறை | சுப்பிரமணியபாரதி, புலவர் கு.கணபதி, புலவர் ந.சோமசுந்தரம் |
| திருமறை | கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை |
| திருவள்ளுவப் பயன் | நச்சினார்க்கினியர் |
| திருவள்ளுவர் | சாமிநாததேசிகர் |
| தெய்வமாமறை | சோடாசவதானம் சுப்பராய செட்டியார் |
| பழமொழி | அருணகிரிநாதர், சென்னி மல்லையர் |
| பால்முறை | கோவூர்கிழார் |
| பொய்யாமொழி | வெள்ளிவீதியார் தி.மாலை 23 |
| பொருளுரை | சீத்தலைச் சாத்தனார் |
| முதுமொழி | சோமேசர் முதுமொழி வெண்பா, முதுமொழி மேல் வைப்பு |
| முப்பால் | பதினெண் கீழ்க் கணக்கைக் காட்டும் - பழம் பாடல் கல்லாடர், சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார், நாகன் தேவனார், கோதமனார், முகையலூர்ச் சிறு கருந்தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனார், கீரந்தையார், பாரதம் பாடிய பெருந்தேவனார், உருத்திர சன்மகண்ணனார், களத்தூர்கிழார், அக்காரகனி நச்சுமனார், தெனீக்குடி கீரனார், ஆலங்குடி வங்கனார். |
| வள்ளுவர் | திரு.வி.க; வ.சுப.மாணிக்கம், உமாபதி சிவாசாரியார் |
| வள்ளுவமாலை | வேங்கட சுப்பிரபாரதியார் |
| வள்ளுவர் வாய் மொழி | மாங்குடி மருதனார் செயலூர்க்கொடுஞ் செங்கண்ணனார். |
| வள்ளுவனார் வைப்பு | பெருந்தொகை |
| தெய்வ நூல் | திருக்குறள் ஆறுமுகநாவலர் பதிப்பு |

| | |
|---|---|
| | சிறப்புப்பாயிரம் |
| வாயுரை வாழ்த்து | மதுரையறுவை வாணிகன், இளவேட்டனார் |
| வள்ளுவன் வாய்ச்சொல் | இறையனார் |
| குறள் வெண்பா | கோவூர் கிழார், உறையூர் முது கூற்றனார். இழிகட் பெருங்கண்ணனார், நச்சுமனார் கவுணியனார், மதுரைப் பாலாசிரியனார். |
| உலகப் பொதுமறை | திருக்குறள் வீ.முனுசாமி |
| திருக்குறள் | மறைமலையடிகள், நாகை சொ.தண்டபாணிப்பிள்ளை, கு.மோகனராசு |
| வள்ளுவதேவன் வசனம் | பெருந்தொகை 2001 |

**தகவல் கு.மோகனராசு**
**திருக்குறளின் மரபுகள்**
**சென்னைப் பல்கலைக்கழகம், 1981**

# திருவள்ளுவமாலை

திருந்தகு தெய்வத் திருவள்ளுவரோடு
உருத்தகு நற்பலகை ஒக்க - இருக்க
உருத்திர சன்மர் என உரைத்து வானில்
ஒருக்கஓ என்றது ஓர் சொல்.

- அசரீரி

நாடா முதல் நான் மறைநான் முகன் நாவில்
பாடா இடைப்பா ரதம் பகர்ந்தேன் - கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலை வேல் மாற பின்
வள்ளுவன் வாயதுஎன் வாக்கு.

- நாமகள்

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர் மையதாய்க் குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போன்ம்
மன் புலவன் வள்ளுவன் வாய்ச் சொல்

- இறையானார்

நான்மறையின் மெய்ப் பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்து உரைத்த நூல் முறையை
வந்திக்க சென்னி வாய் வாழ்த்துக நல் நெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி.

- உக்கிரப் பெருவழுதியார்

தினையளவு போதாச் சிறுபுலர்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனை அளகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

- கபிலர்

மாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாண் அடியால்
ஞாலம் முழுவதும் நயந்து அளந்தான் - வால் அறிவின்
வள்ளுவருந் தங்குறள் வெண்பா அடியால் வையத்தார்
உள்ளுவல் எல் லாம் அளந்தார் ஓர்ந்து.

- பரணர்

தானே முழுது உணர்ந்து தண்தமிழின் வெண் குறளால்
ஆனா அறம் முதலா அந்நான்கும் - ஏனோர்க்கு
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழி உலகு என் ஆற்றும் மற்று.

- நக்கீரர்

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும்
வள்ளுவன் என்பான் ஓர் பேதை அவன் வாய்ச் சொல்
கொள்ளார் அறிவுடையார்

- மாமூலனார்

ஒன்றே பொருள்எனின் வேறு என்ப வேறு எனின்
ஒன்று என்ப ஆறுசமயத்தார் நன்று என
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
அப்பால் மொழிந்த மொழி

- கல்லாடர்

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார் அன்றோ?
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்

- சீத்தலைச் சாத்தனார்

சிந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன் அளாய்
மோந்தபின் பார்க்கும் தலைக்குத்தில் - காந்தி
மலைக்குத்தும் மால்யானை வள்ளுவர் முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு

- மருத்துவர் தாமோதரனார்

தாளார் மலர்ப்பொய்கை தாம் குடைவார் தண்ணீரை
வேளாதி ஒழிதல் வியப்பு அன்று வாளா தாம்
அப்பால் ஒரு பார்வை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழி மூழ்கு வார்.

- நாகன் தேவனார்.

பரந்த பொருள் எல்லாம் பார் அறிய வேறு
தெரிந்து தினந்தோறும் சேரச் சுருக்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லார் ஆர் வள்ளுவர் அல்லால்

- அரிசில் கிழார்

கான்நின்ற தொங்கலாய் காசிபனார் தந்தது முன்
கூநின்று அளந்த குறந்த குறள் என்ப - நூல் முறையான்
வான் நின்று மண்ணின்று அளந்ததே வள்ளுவனார்
தாம்நின்று அளந்த குறள்

- பொன்முடியார்

ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத்து ஏட்டின் புறத்து எழுதார் - ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர்வு இன்று

- கோதமனார்

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்தன் பின் - போய் ஒருத்தர்
வாய்க்கேட்க நூல் உளவோ? மன்னுதமிழ்ப் புலவ
ராய்க் கேட்க வீற்றிருக்க லாம்.

- நத்தத்தனார்

உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத்
தெள்ளுதல் அன்றே செயற்பால் - வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழிஉண்டு எனப்பகர்வார்
எப்பா வலரினும் இல்

- முகையலூர் சிறுகருந் தும்பியார்

தப்பா முதற்பாவால் தாம் மாண்ட பாடலினால்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர் - எப்பாலும்
வை வைத்த கூர்வேல் வழுதி மனம் மகிழத்
தெய்வத் திரு வள்ளுவர்.

- கீரந்தையார்

வீடு ஒன்று பாயிரம் நான்கு விளங்கு அறம்
நாடிய முப்பத்து மூன்று ஒன்று ஊழ் - கூடு பொருள்
எள்ளில் எழுபது இருபதிற் றைந்து இன்பம்
வள்ளுவர் சொன்ன வகை

- சிறுமேதாவியார்

உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்
உத்தர மாமதுரைக்கு அச்சு என்ப இப்பக்கம்
மாதானு பங்கி மறுவுஇல் புலச் செந்நாப்
போதார் புனற் கூடற்கு அரசு

- நல்கூர் வேள்வியார்

அறம் நான்கு அறிபொருள் ஏழொன்று காமத்
திறன் மூன்று எனப்பகுதி செய்து - பெறல் அரிய
நாலும் மொழிந்த பெரு நாவலரே நன்கு உணர்வார்
போலும் ஒழிந்த பொருள்

- தொடித்தலை விழுத்தண்டினார்

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே - செய்யா
அதற்கு உரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்கு உரியர் அல்லாதார் இல்

- வெள்ளி வீதியார்

ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கித் - தீது அற்றோர்
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு

- மாங்குடிமருதனார்

பாயிரம் நான்கு இல் அறம் இரு பான் மூன்றே
தூய துறவறம் ஒன்று ஊழாக - ஆய
அறத்துப்பால் நாவ்வகையா ஆய்ந்து உரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

- எரிச்சலூர் மாலாடனார்

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரண் இரண்டு ஒன்று ஒண் கூழ் - இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் - குடி பதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை.

- போக்கியார்

ஆண்பால் ஏழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்து அன்பு
பூண்பால் இருபால் ஓர் ஆறாக - மாண்பு ஆய
காமத்தின் பக்கம் ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

- மோசிகீரனார்

ஐயாறும் நூறும் அதிகாரம் மூன்றுமாம்
மெய்யாய வேதப் பொருள் விளங்கப் பொய்யாது
தந்தான் உலகிற்குத் தான் வள்ளுவனாகி
அந்தாமரை மேல் அயன்

- காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்

எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் சொல்லால்
பரந்தபா வால் என் பயன்? வள்ளுவனார்
கரந்தபா வையத் துணை

- மதுரைத் தமிழ் நாகனார்

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர் தாம் செப்பவரும் - முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதை மனுப் பண்டை மன்ற
நேர்வன மற்று இல்லை நிகர்.

- பாரதம் பாடிய பெருந்தேவனார்

மணற் கிளக்க நீர் ஊறும் மைந்தர்கள் வாய்வைத்து
உணச் சுரக்கும் தாய்முலை ஒண்பால் - பிணக்கு இலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புல வோர்க்கு
ஆய்தொறும் ஊறும் அறிவு.

- உருத்திரசன்ம கண்ணனார்

ஏதம் இல் வள்ளுவர் இன்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம் உரைத்ததனால்
தாது அவிழ் தார் மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

- பெருஞ்சித்திரனார்

இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும்
முன்பு அறியச் சொன்ன முதுமொழி நூல் - மன்பதைகட்டு
உள்ள அரிதென்று அவை வள்ளுவர் உலகம்
கொள்ள மொழிந்தார் குறள்

- நரிவெரூஉத்தலையார்

புலவர் திருவள்ளுவர் அன்றிப் பூமேல்
சிலவர் புலவர் எனச் செப்பல் - நிலவு
பிறங்கு ஒளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கு இருள்மா லைக்கும் பெயர்.

- மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க் கிழார்

இன்பமும் துன்பமும் என்னும் இவை இரண்டும்
மன்பதைக்கு எல்லாம் மனம் மகிழ – அன்பு ஒழியாது
உள்ளி உணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து

– மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற்கு அருமுனியா ஆனைக்கு – அமர்உம்பல்
தேவில் திருமால் எனச் சிறந்தது என்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண்பா.

– கவிசாகரப் பெருந்தேவனார்

அறம் முப்பத்தெட்டு பொருள் எழுபது இன்பத்
திறம் இருபத் தைந்தால் தெளிய – முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓத அழுக்கு அற்றது உலகு.

– மதுரைப் பெருமருதனார்

அறம் முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக் – குறள் வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பால்முறை நேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி

– கோவூர்கிழார்

தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்
பாவிற் சிறந்திடும் முப் பால்பகரார் – நாவிற்கு
உயலில்லை சொற்சுவை ஓர்வில்லை மற்றும்
செயலில்லை என்னும் திரு.

– உறையூர் முது கூற்றனார்.

இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியின் தெளிவுபெற – மும்மையின்
வீடு அவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன் குறள் வெண்பா

– இழிகண் பெருங்கண்ணனார்

ஆவனவும் ஆகாதனவும் அறிவுடையார்
யாவரும் வல்லார் எடுத்து இயம்பத் – தேவர்
திருவள்ளுவர் தாமும் செப்பியவே செய்வார்
பொருவில் ஒழுக்கம் பூண்டார்

– செயிர்க் காவிரியார் மகனார் சாத்தனார்

வேதப்பொருளை விரகால் விரித்து உலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார் ஆதலால்
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டு என்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு

- செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்

ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது
சீரியது என்று ஒன்றைச் செப்பரிதால் - ஆரியம்
வேதம் உடைத்து தமிழ் திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து

- வண்ணக்கஞ் சாத்தனார்

ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தருமம் முதல் நான்கும் சாலும் - அருமறைகள்
ஐந்தும் சமயநூல் ஆறும்நம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்

- களத்தூர்க்கிழார்

எழுத்து அசை சீர் அடி சொற்பொருள் யாப்பு
வழக்கில் வனப்பு அணி வண்ணம் - இழுக்கு இன்றி
என்று எவர் செய்தன? எல்லாம் இயம்பின
இன்று இவர் இன்குறள் வெண்பா

- நச்சுமனார்

கலை நிரம்பிக் காண்டற்கு இனிதாகிக் கண்ணின்
நிலை நிரம்பும் நீர்மைத் தெனினும் - தொலைவு இலா
வான் ஊர் மதியம் தனக்கு உண்டோ வள்ளுவர் முப்
பால்நூல் நயத்தின் பயன்

- அக்காரக்கனி நச்சுமனார்

அறம் தகழி ஆ ற பொருள் திரி இன்பு
சிறந்த நெய் செஞ்சொல் தீத்தண்டு - குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள் இருள் நீக்கும் விளக்கு.

- நாப்பாலத்தனார்

உள்ளக் கமலம் மலர்த்தி உளத்து உள்ள
தள்ளற்கு அரிய இருள் தள்ளுதலால் - வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்கும் எனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

- குலபதி நாயனார்.

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின பொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலின்
தெய்வத் திருவள்ளுவர் செப் பிய குறளால்
வையத்து வாழ்வார் மனத்து

- தேனீக்குடிக்கீரனார்

அறம் அறிந்தோம் ஆன்ற பொருள் அறிந்தோம் இன்பின்
திறன் தெரிந்தோம் வீடு தெளிந்தோம் - மறன் எறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம் வாயால்
கேளாதன எல்லாம் கேட்டு

- கொடி ஞாழல் மாணி பூதனார்

சிந்தைக்கு இனிய செவிக்கு இனிய வாய்க்கு இனிய
வந்த இருவினைக்கும் மாமருந்து - முந்திய
நன்னெறி நாம் அறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள் வெண்பா

- கவுணியனார்

வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெண் திங்கள்
பொள் என நீக்கும் புற இருளைத் தெள்ளிய
வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள் இருள் நீக்கும் ஒளி

- மதுரைப் பாலாசிரியனார்

வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின் வாய்மடுப்பும்
தெள் அமுதமின் தீஞ்சுவையும் ஒவ்வாரால் - தென் அமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்தமிழின் முப்பால் மகிழ்ந்து

- ஆலங்குடி வங்கனார்

கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

- இடைக்காடர்

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

- ஔவையார்

# திருக்குறள் - உரையாசிரியர்கள் (தமிழ் உரைகள்)

| | உரையாசிரியர் | நூலின் பெயர் |
|---|---|---|
| 01. | மணக்குடவர் | திருக்குறள் மணக்குடவர் உரை |
| 02. | பரிப்பெருமாள் | திருக்குறள் பரிப்பெருமாள் உரை |
| 03. | பரிதியார் | திருக்குறள் பரிதியார் உரை |
| 04. | காலிங்கர் | திருக்குறள் காலிங்கர் உரை |
| 05. | பரிமேலழகர் | திருக்குறள் பரிமேலழகர் உரை |
| 06. | மல்லர் | உரை கிடைக்கவில்லை |
| 07. | நச்சார் | உரை கிடைக்கவில்லை |
| 08. | திருமலையர் | உரை கிடைக்கவில்லை |
| 09. | தருமர் | உரை கிடைக்கவில்லை |
| 10. | தாமத்தர் | உரை கிடைக்கவில்லை |
| 11. | காரிரத்தின கவிராயர் (1550 - 75) | நுண்பொருள்மாலை |
| 12. | கவிராஜபண்டிதர் | கவிராஜ பண்டிதர் உரை |
| 13. | ஜைனர் | ஜைனர் உரை |
| 14. | பழைய உரையாசிரியர் | |
| 15. | பழைய உரையாசிரியர் | |

## திருக்குறள் அடிகளைப் பதிவு செய்து வைத்துள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| 01. | சினேந்திர வெண்பா | (1330 வெண்பா) |
| 02. | இரங்கேச வெண்பா | (133 வெண்பா) |
| 03. | தினகர வெண்பா | (133 வெண்பா) |
| 04. | வட மலை வெண்பா | (133 வெண்பா) |
| 05. | திருமலை வெண்பா | (133 வெண்பா) |
| 06. | முதுமொழி மேல்வைப்பு | (வெண்பா) |
| 07. | திருப்புல்லாணி மாவை | (133 கட்டளைக் கவித்துறை) |
| 08. | பழைய விருத்த நூல் | (133 விருத்தம்) |
| 09. | சோமசர் முதுமொழி வெண்பா | (133 வெண்பா) |
| 10. | திருத்தொண்டர் வெண்பா | (100 வெண்பா) |
| 11. | சிவ சிவ வெண்பா | (133 வெண்பா) |
| 12. | வள்ளுவர் நேரிசை | |
| 13. | முருகேசர் முதுநெறி வெண்பா | (133 வெண்பா) |
| 14. | திருக்குறட் குமரேச வெண்பா | (1330 வெண்பா) |

## திருக்குறளின் தனிச்சிறப்பியல்புகள்

01. ஈரடிக்குறட்பாவினால் ஆக்கப்பட்டது.
02. பழைய நூல்களில் பதின்மரால் உரையெழுதப்பட்ட நூல்
03. திருக்குறளுக்கு முதன்முதல் உரையெழுதியவர் மணக்குடவர்
04. திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையே மிகச் சிறந்த உரையாகக் கருதப்படுகிறது.
05. தமிழ் நெடுங்கணக்கில் அகரத்தில் - தொடங்கினகரத்தில் முடியும் நூல்
06. திருக்குறளை முதன்முதல் இலத்தீன் மொழியில் 1730 இல் வீரமாமுனிவர் மொழிபெயர்த்தார்
07. உலக மொழிகளில் பைபிளுக்கு அடுத்த படியாக மிக அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்
08. திருவள்ளுவர் ஆண்டு என ஒரு காலக்கணிப்பைச் செய்யத் துணைநின்ற நூல் (இக் கணக்கை அறிவித்தவர் மறைமலையடிகள். இது இன்று உலகம் முழுவதும் தமிழர்களால் தமிழ் ஆண்டாகக் கொள்ளப்பட்டு வருகிறது. வள்ளுவர் ஆண்டு கி.மு. 31 (2019 + 31 : 2050))
09. மு.வரதராஜனின் திருக்குறள் தெளிவுரை தமிழில் மிக அதிகப் பதிப்புக்களைக் கண்டுள்ளது.
10. மொழி, இனம், காலம், இடம் எல்லாவற்றையும் கடந்து எல்லா சமயத்தினராலும் உலகப் பொது மறையாகப் போற்றப்படும் நூல்

## திருக்குறள் தொடர்கள் கட்டுரை எழுதுவதற்கும் சுவரொட்டிப் பயன்பாட்டிற்கும்

| | | |
|---|---|---|
| 01. | நீரின்று அமையாது உலகு | (குறள் 20) |
| 02. | அந்தணர் என்போர் அறவோர் | (குறள் 30) |
| 03. | அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை | (குறள் 32) |
| 04. | அறத்தான் வருவதே இன்பம் | (குறள் 39) |
| 05. | வளத்தக்காள் வாழ்க்கைத்துணை | (குறள் 51) |
| 06. | மகளிர் நிறை காக்கும் காப்பே தலை | (குறள் 57) |
| 07. | சொற்காத்துச் சோர்வு இலாள் பெண் | (குறள் 56) |
| 08. | மங்கலம் என்ப மனைமாட்சி | (குறள் 60) |
| 09. | தம் பொருள் என்ப தம் மக்கள் | (குறள் 63) |
| 10. | அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் | (குறள் 71) |
| 11. | அன்பு ஈனும் ஆர்வம் உடைமை | (குறள் 74) |
| 12. | மறவற்க மாசற்றார் கேண்மை | (குறள் 106) |
| 13. | அடக்கம் அமரருள் உய்க்கும் | (குறள் 121) |
| 14. | மலையினும் மாணப் பெரிது | (குறள் 124) |
| 15. | யா காவாராயினும் நா காக்க | (குறள் 127) |
| 16. | ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் | (குறள் 131) |
| 17. | தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை | (குறள் 151) |
| 18. | பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் | (குறள் 156) |
| 19. | வெஃகாமை வேண்டும் பிறன் கைப்பொருள் | (குறள் 178) |
| 20. | தீயவை தீயினும் அஞ்சப்படும் | (குறள் 202) |
| 21. | மறந்தும் பிறன் கேடு சூழற்க | (குறள் 204) |
| 22. | வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை | (குறள் 221) |
| 23. | ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று | (குறள் 259) |
| 24. | தன் நெஞ்சறிவது பொய்யற்க | (குறள் 293) |
| 25. | பொய்யா விளக்கே விளக்கு | (குறள் 299) |
| 26. | தன்னையே சொல்லும் சினம் | (குறள் 305) |
| 27. | அறவினை யாதெனில் கொல்லாமை | (குறள் 321) |
| 28. | உறங்குவது போலும் சாக்காடு | (குறள் 339) |
| 29. | மெய்ப்பொருள் காண்பது அறிவு | (குறள் 335) |
| 30. | செம்பொருள் காண்பது அறிவு | (குறள் 358) |
| 31. | வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை | (குறள் 363) |
| 32. | ஆகு ஊழால் தோன்றும் அசைவு இன்மை | (குறள் 371) |
| 33. | திருவேறு தெள்ளியராதலும் வேறு | (குறள் 374) |
| 34. | ஊழின் பெருவலி யாவுள | (குறள் 380) |
| 35. | கற்க கசடற | (குறள் 391) |
| 36. | கண்ணுடையர் என்பவர் கற்றோர் | (குறள் 393) |

37. மாந்தர்க்கு கற்றனைத்து ஊறும் அறிவு (குறள் 396)
38. கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து (குறள் 398)
39. கேடு இல் விழுச் செல்வம் கல்வி (குறள் 400)
40. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் (குறள் 441)
41. கற்றிலனாயினும் கேட்க (குறள் 414)
42. எனைத்தானும் நல்லவை கேட்க (குறள் 416)
43. அறிவு அற்றம் காக்கும் கருவி (குறள் 421)
44. நன்றின் பால் உய்ப்பது அறிவு (குறள் 422)
45. மெய்ப் பொருள் காண்பது அறிவு (குறள் 423)
46. நுண் பொருள் காண்பது அறிவு (குறள் 424)
47. மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு (குறள் 425)
48. அறிவுடையார் ஆவது அறிவார் (குறள் 427)
49. அறிவுடையார் எல்லாம் உடையார் (குறள் 430)
50. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை (குறள் 439)
51. முதல் இலார்க்கு ஊதியம் இல்லை (குறள் 449)
52. இன நலம் எல்லாப் புகழும் தரும் (குறள் 457)
53. எண்ணித் துணிக கருமம் (குறள் 467)
54. பகல் வெல்லும் கூகையைக் காக்கை (குறள் 481)
55. ஞாலம் கருதினும் கைகூடும் (குறள் 484)
56. செறுநரைக் காணின் சுமக்க (குறள் 488)
57. அற்றாரைத் தேறுதல் ஓம்புக (குறள் 506)
58. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை (குறள் 556)
59. கடிது ஓச்சி மெல்ல எறிக (குறள் 562)
60. கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் (குறள் 575)
61. உடையார் எனப்படுவது ஊக்கம் (குறள் 591)
62. மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு (குறள் 595)
63. முயற்சி திருவினை ஆக்கும் (குறள் 616)
64. முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும் (குறள் 619)
65. இடுக்கண் வருங்கால் நடுக (குறள் 621)
66. வேட்ப மொழிவதாம் சொல் (குறள் 643)
67. திறன் அறிந்து சொல்லுக சொல்லை (குறள் 644)
68. செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை (குறள் 656)
69. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் (குறள் 661)
70. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் (குறள் 667)
71. நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் (குறள் 706)
72. அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக (குறள் 711)
73. அரியர் அவையகத்து அஞ்சாதவர் (குறள் 723)
74. ஆற்றின் அளவறந்து கற்க (குறள் 725)
75. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் (குறள் 752)
76. செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு (குறள் 752)

77. பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும் (குறள் 753)
78. நகுதற் பொருட்டன்று நட்டல் (குறள் 784)
79. முகம் நக நட்பது நட்பு அன்று (குறள் 785)
80. இடுக்கண் களைவதாம் நட்பு (குறள் 788)
81. மருவுக மாசற்றார் கேண்மை (குறள் 800)
82. நட்புக்கு உறுப்புக் கெழுதகைமை (குறள் 802)
83. அறிவு இன்மை இன்மையுள் இன்மை (குறள் 841)
84. கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை (குறள் 872)
85. இளைதாக முள்மரங் கொல்க (குறள் 879)
86. அஞ்சுக கேள் போல் பகைவர் தொடர்பு (குறள் 882)
87. உண்ணற்க கள்ளை (குறள் 922)
88. அற்றால் அளவறிந்து உண்க (குறள் 943)
89. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் (குறள் 959)
90. பெருக்கத்து வேண்டும் பணிதல் (குறள் 963)
91. பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் (குறள் 972)
92. பணியுமாம் என்றும் பெருமை (குறள் 978)
93. பண்புடையார் பட்டு உண்டு உலகம் (குறள் 996)
94. மரம் போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர் (குறள் 997)
95. நாண் உடைமை மாந்தர் சிறப்பு (குறள் 1012)
96. உழுவார் உலகத்திற்கு ஆணி (குறள் 1032)
97. சுழன்றும் ஏர்ப்பின்னதும் உலகம் (குறள் 1031)
98. உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் (குறள் 1033)
99. அற்றம் மறைக்கும் பெருமை (குறள் 980)
100. பேராண்மை என்ப தறுகண் (குறள் 773)
101. அருள் என்னும் அன்பு ஈன் குழவி (குறள் 757)
102. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் (குறள் 572)
103. புறந்தூய்மை நீரான் அமையும் (குறள் 298)
104. அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் (குறள் 298)
105. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் (குறள் 241)
106. நன்றி மறப்பது நன்றன்று (குறள் 108)
107. முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து (குறள் 90)
108. வான் நோக்கி வாழும் உலகு எல்லாம் (குறள் 542)
109. பெருமை பெருமிதம் இன்மை (குறள் 1979)
110. கொல்லா நலத்தது நோன்மை (குறள் 984)
111. இரவு உள்ள உள்ளம் உருகும் (குறள் 1069)
112. அச்சமே கீழ்களது ஆசாரம் (குறள் 1075)
113. அறைபறை அன்னர் கயவர் (குறள் 1076)
114. சொல்லப் பயன்படுவர் சான்றோர் (குறள் 1078)
115. அலர் எழ ஆர் உயிர் நிற்கும் (குறள் 1141)
116. கள்ளினும் காமம் இனிது (குறள் 1201)

117. உப்பு அமைந்தற்றால் புலவி (குறள் 1302)
118. அகரமுதல் எழுத்தெல்லாம் (குறள் 01)
119. அன்று அறிவாம் என்னாது அறம் செய்க (குறள் 36)
120. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை (குறள் 49)
121. பெண்ணின் பெருந்தக்க யாவுள (குறள் 54)
122. நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் 60)
123. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் (குறள் 72)
124. அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)
125. அறத்திற்கே அன்பு சார்பு (குறள் 76)
126. அன்பின் வழியது உயிர்நிலை (குறள் 80)
127. உய்வு இல்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள் 110)
128. அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும் (குறள் 121)
129. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் (குறள் 125)

## திருக்குறளில் எண் பயன்பாடு

குறள் எண்

01. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார் (5) (06)

02. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை (8) (09)

03. தானம் தவமிரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின் (2) (19)

04. உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பின்கோர் வித்து (5) (24)

05. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங்கரி (5) (25)

06. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (4) (35)

07. இல்வாழ்வான் என்பான் இயல்புடையமூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை (3) (41)

08. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (5) (43)

09. எழுபிறப்பும் தீயவை தீண்ட பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் (7) (62)

10. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. (7) (107)

11. சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி (1) (118)

12. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து (5) (126)

13. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும் (1) .(128)

14. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண் (4) (146)

15. ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ் (1) (156)

16. வறியார்க் கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறி யெதிர்ப்பை நீர துடைத்து (1) (221)

17. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று (1) (259)

18. வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (5) (271)

19. நாள் என ஒன்று போல் காட்டி உயிர்ஈரும்
வாள் அது உணர்வார்ப் பெறின் (1) (334)

20. அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு (5) (343)

21. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் (3) (360)

22. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு (2) (374)

23. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (கோடி) (377)

24. படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (6) (381)

25. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. (4) (382)

26. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. (3) (383)

27. கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி (4) (390)

28. எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்க. (2) (392)

29. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர் (2) (393)

30. ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து (7) (398)

31. கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவதற்கு
மாடல்ல மற்றை யவை. (1) (400)

32. கல்லாதான் சொற்கா முறுதல் முவையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற் றற்று (2) (402)

33. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (2) (455)

34. அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந் தெரிந்து தேறப் படும். (4) (501)

35. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு (4) (513)

36. ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற் றென்க மன்னவன் கண். (2) (581)

37. ஒற்றொற் றுணராமை ஆள்க உடன் மூவர்
சொல் தொக்க தேறப் படும். (3) (589)

38. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடு நீரார் காமக் கலன் (4) (605)

39. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு (5) (632)

40. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும். (70 கோடி) (639)

41. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (2) (662)

42. வினை பகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (2) (674)

43. அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று. (3) (682)

44. அறிவு உரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. (3) (684)

45. தூய்மை, துனைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. (3) (688)

46. உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். (4) (743)

47. ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (2) (760)

48. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்து அடுத்த கோடி உறும். (பத்துக்கோடி) (817)

49. இரு மனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திரு நீக்கப்பட்டார் தொடர்ப்பு. (2) (920)

50. உடை செல்வம் ஊண் ஒளி கல்வி என்று ஐந்தும்
அடையாவாம் ஆயங் கொளின். (5) (939)

51. மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று. (3) (941)

52. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந்தார். (3) (952)

53. நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. (4) (953)

54. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.. (அடுக்கிய கோடி) (954)

55. ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை இளி ஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல். (1) (971)

56. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண். (5) (983)

57. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (2) (992)

58. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடியுண் டாயினும் இல். (அடுக்கிய கோடி) (1005)

59. ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. (2) (1022)

60. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்தோ. (3) (1085)

61. இரு நோக்கு இவளுண்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய் நோக்கொன் றந்நோய் மருந்து. (2) (1091)

62. கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. (5) (1101)

63. கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. (1) (1146)

64. ஒரு தலையான் இன்னாது காமம் காப் போல
இருதலை யானும் இனிது. (2) (1196)

65. காமம் விடு ஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன் இவ் விரண்டு. (2) (1247)

66. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. (1) (1266)

67. ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட் சென்றார்
வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு. (1) (7) (1269)

68. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வது ஒன்று உண்டு. (1) (1273)

69. முகைமொக்குள் உள்ளது நாற்றம் போல் பேதை
நனை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு. (1) (1274)

70. நெருநல் சென்றார் எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து (7) (1278)

## திருக்குறளில் வினா

01. கற்றதனால் ஆய பயன்என் கொல் (02)
02. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் (53)
03. சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் (57)
04. அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் (71)
05. புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் (79)
06. வித்தும் இடல் வேண்டும் கொல்லோ (85)
07. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ (99)
08. நலக்குரியார் யார் (149)
09. அஃகாமை செல்வத்திற்கு யாது (178)
10. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர் என்னை கொல் (188)
11. மாரி மாட்டு என் ஆற்றுங் கொல்லோ உலகு (211)
12. ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் (228)
13. இகழ்வாரை நோவது எவன் (237)
14. அருளல்லது யாது (254)
15. வானுயர் தோற்றம் எவன் செய்யும் (272)
16. அறிவினான் ஆகுவதுண்டோ (315)
17. வாய்மை எனப்படுவது யாது (291)
18. அறவினை யாது எனில் (321)
19. நல்லாறு எனப்படுவது யாது (324)
20. புக்கில் அமைந்தின்று கொல்லோ (340)
21. மற்றும் தொடர்பாடு எவன் கொல் (345)
22. அன்றாங்கால் அல்லற் படுவ தெவன் (380)
23. ஊழிற் பெருவலி யாவுள (380)
24. அருவினை யென்ப உளவோ (483)
25. உளபோல் முகத்தெவன் செய்யும் (574)
26. சாவாரையாரோ பிழைத்து ஒறுக்கிற்பவர் (779)
27. செயற்கரிய யாவுள (781)
28. நட்பிற்கு வீற்றிருக்கை யாது (789)
29. பழைமை எனப்படுவது யாது எனில் (801)
30. பழகிய நட்பு எவன் செய்யும் (803)
31. பேதைமை என்பதொன்று யாதெனின் (831)
32. வெண்மை எனப்படுவது யாதெனின் (844)
33. வகைமாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னாம் (897)
34. சால்பிற்குக் கட்டளை யாது (986)
35. இரு நிலந்தான் தாங்காது மன்றோ (990)
36. எச்சமென்று என் எண்ணுங் கொல்லோ (1004)
37. இடும்பைக்கே கொள்கலம் கொல்வோ (1029)
38. இன்மையின் இன்னாதது யாது (1041)

39. இன்றும் வருவது சொல்லோ (1048)
40. ஈவார் கண் என்னுண்டாம் (1059)
41. கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்வோ (1070)
42. எற்றிற் குரியர் கயவர் (1080)
43. அணங்கு கொல் ஆய்மயில் கொல்வோ (1081)
44. கனங்குழை மாதர் கொல்
45. கூற்றமோ, கண்ணோ, பிணையோ (1085)
46. நாணும் உடையாட்டு அணி எவனோ (1089)
47. மென்றோள் துயிலின் இனிது கொல் (1103)
48. தீ யாண்டுப் பெற்றாள் இவள் (1104)
49. அலர் நாண ஒல்வதோ (1149)
50. சுடல் ஆற்றுமோ தீ (1159)
51. கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ (1171)
52. பண்பியார்க்கு உரைக்கோ (1181)
53. பருவரலும் பைதலும் காணான் கொல் (1197)
54. நினைப்பவர் போன்று நினையார் கொல் (1203)
55. என்னுளேன் மன்னோ (1206)
56. மறப்பின் என்னாவன் மற்கொல் (1207)
57. யாமும் உளேங்கொல் (1204)
58. யாது செய்வேன் கொல் (1211)
59. மாலையோ (1221)
60. செய்த நன்று என் கொல் எவன் கொல்யான் (1225)
61. பாடுபெறுதியோ நெஞ்சே (1237)
62. நினைத்தொன்று சொல்லாயோ (1241)
63. உள்ளி என் பரிதல் நெஞ்சே (1243)
64. கண்ணும் கொளச் சேறி நெஞ்சே (1244)
65. யாருழைச் சேறி (1249)
66. நெஞ்சத்து உடையமோ (1250)
67. நெஞ்சினார்க்கு உண்டோ (1260)
68. புலப்பேன் கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன் கொல் (1267)
69. எம்மை மறந்திரோ (1318)
70. எவன் நெஞ்சே (1291)
71. சூழ்வார் யார் நெஞ்சே (1294)
72. துன்பத்திற்கு யாரே துணையாவார் (1299)
73. மற்றென் மறந்தீர் (1316)
74. யாருள்ளித் தும்மினீர் (1317)
75. யாருள்ளி நோக்கினீர் (1320)

## திருக்குறளில் உணவும் சுவையும்

01. வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் **அமிழ்தம்** என்று உணரற் பாற்று. 11

02. **அமிழ்தினும்** ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய **கூழ்** 64

03. வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்து ஓம்பி
மிச்சில் **மிசைவான்** புலம் 85

04. இனிய உளவாக இன்னாத கூறல்
**கனியிருப்பக் காய் கவர்ந் தற்று.** 100

05. ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 215

06. பயன் மரம் உள்ளூர்ப் **பழுத்தற்றால்** செல்வம்
நயன் உடை யான்கண் படின். 216

07. தன் **ஊன்** பெருக்கற்குத் தான் பிறிது **ஊன்** உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 251

08. பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கு இல்லை **ஊன் தின்பவர்க்கு.** 252

09. அருள் அல்லது யாது எனின் கொல்லாமை கோறல்
பொருள் அல்லது **அவ்வூன் தினல்** 254

10. **உண்ணாமை** உள்ளது உயிர்நிலை **ஊன் உண்ண**
அண்ணாத்தல் செய்யாது அளறு. 255

11. **தினற்** பொருட்டால் கொல்லாது உலகு எனின் யாரும்
விலைப் பொருட்டால் **ஊன்** தருவார் இல். 256

12. **உண்ணாமை** வேண்டும் **புலாஅல்** பிறிது ஒன்றன்
புண் அது உணர்வார்ப் பெறின். 257

13. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப் பிரிந்த **ஊன்.** 258

14. அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து **உண்ணாமை** நன்று. 259

15. செவிக்கு **உணவு** இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும். 412

16. செவி **உணவின்** கேள்வியுடையார் **அவி உணவின்**
ஆன்றோரோடு ஒப்பர் நிலத்து. 413

17. செவியிற் **சுவை** உணரா **வாய் உணர்**வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். 420

18. காக்கை கரவா கரைந்**துண்ணும்** ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள. 527

19. **கூழுங்** குடியும் ஒருங்கிழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு. 554

20. ஈன்றாள் **பசி** காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656

21. உறு**பசி**யும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு. 734

22. உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டா தார். 922

23. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
**நஞ்சுண்பார் கள் உண்பவர்.** 926

24. **கள் உண்ணாப்** போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான் கொல் உண்டதன் சோர்வு. 930

25. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி **உணின்.** 942

26. அற்றால் அளவறிந்து **உண்க** அஃது உடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. 943

27. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறு அல்ல
துய்க்க துவரப் பசித்து. 944

28. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. 945

29. இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய். 946

30. தீ அளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோய் அளவு இன்றிப் படும். 947

31. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 1000

32. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண் என்னும்
நன்மை குறித்தது சால்பு. 1013

33. உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுது உண்டு பின்செல் பவர். 1033

34. துப்புரவு இல்லார் துவரத் துவறாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050

35. தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கு இனியது இல். 1065

36. ஆவிற்கு நீர் என்று இருப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். 1066

37. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். 1079

38. உறு தோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 1106

39. பாலொடு தேன் கலந் தற்றே பனிமொழி
வால்எயிறு ஊறிய நீர். 1121

40. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப் படுந் தோறும் இனிது. 1145

41. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. 1201

42. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு. 1281

43. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள் அற்றே கள்வநின் மார்பு. 1288

44. உப்பு அமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 1302

45. துனியும் புலவியும் இல்வாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306

46. நட்புக்கு உறுப்பு கெழுதகைமை மற்று அதற்கு
உப்பு ஆதல் சான்றோர் கடன். 802

## திருக்குறளில் நோயும் பிணியும்

01. தீப்பால தான் பிறர்கண் செய்யற்க நோய்ப்பால்
தன்னை அடல் வேண்டாதான். 206

02. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தம் நோய் போல் போற்றாக்கடை. 315

03. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய் செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 320

04. காமம், வெகுளி, மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360

05. சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்று அழித்துச்
சார்தரா சார்தரும் நோய். 359

06. எதிராக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். 429

07. மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று. 941

08. தீ அளவு அன்றி தெரியான் பெரிது உண்ணின்
நோய் அளவு இன்றிப் படும். 947

09. நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல். 948

10. இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து. 1091

11. பிணிக்கு மருந்து.பிறமன் அணியிழை
தன் நோய்க்குத் தானே மருந்து. 1102

12. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந் நோய். 1147

13. மறைப்பேன் மன் யான் இஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்று நீர் போல் மிடும். 1161

14. கரத்தலும், ஆற்றேன் இந்நோயை நோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணும் தகும். 1162

15. கண்கள் தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம் கண்டது. 1171

16. படல் ஆற்றா பைதல் உழக்கும் கடல் ஆற்றாக்
காம நோய் செய்த என் கண். 1175

17. ஓஒ இனிதே எமக்கு இந்நோய் செய்த கண்
தாஅம் இதற் பட்டது. 1176

18. சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. 1183

19. மாலை நோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன். 1226

20. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய். 1227

21. நினைத்து ஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்து ஒன்றும்
எவ்வ நோய் நீக்கும் மருந்து. 1241

22. இருந்து உள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல் நோய் செய்தார்கண் இல். 1243

23. வருக மன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல் நோய் எல்லாம் கெட. 1266

24. பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப கண்ணினால்
காம நோய் சொல்லி இரவு. 1280

25. புல்லாது இராஅப் புலத்தை அவர் உறும்
அல்லல் நோய் காண்கம் சிறிது. 1301

26. அலத்தாரை அல்லல் நோய் செய்தற்றால் தம்மைப்
புலத்தாரைப் புல்லா விடல். 1303

## திருக்குறளில் இன்பம்

01. அறத்தான் வருவதே **இன்பம்** மற்று எல்லாம்
புறத்த புகழும் இல. 39

02. மக்கள் மெய்தீண்டல் உடற்கு **இன்பம்** மற்று அவர்
சொற் கேட்டல் **இன்பம்** செவிக்கு. 65

03. ஒறுத்தார்க்கு ஒரு நாளை **இன்பம்** பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 156

04. சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யாரே
மற்றும் **இன்பம்** வேண்டுபவர். 173

05. ஈத்துவக்கும் **இன்பம்** அறியார் கொல் தாம் உடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 228

06. இருள் நீக்கி **இன்பம்** பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 352

07. **இன்பம்** இடையறாது ஈண்டும் அவா என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 369

08. தாம் **இன்புறுவது** உலகு **இன்புறக்** கண்டு
காமுறுவர் கற்றறிந்தார். 399

09. அறம் பொருள் **இன்பம்** உயிர் அச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும். 501

10. **இன்பம்** விழையான் இடும்பை இயல்பு என்பான்
துன்பம் உறுதல் இலன். 628

11. **இன்பத்துள் இன்பம்** விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629

12. இன்னாமை **இன்பம்** எனக் கொளின் ஆகும் தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

13. துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி
**இன்பம்** பயக்கும் வினை. 669

14. பிணி இன்மை செல்வம் விளைவு **இன்பம்** ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ் வைந்து. 738

15. அறன் ஈனும் **இன்பமும்** ஈனும் திறன் அறிந்து
தீதின்றி வந்த பொருள். 754

16. இன்பத்துள் **இன்பம்** பயக்கும் இகல் என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 854

17. செறுவார்க்குச் சேண் இகவா **இன்பம்** அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 869

18. **இன்பம்** ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 1052

19. **இன்பம்** கடல் மற்றுக் காமம் அஃது அடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166

20. ஊடுதல் காமத்திற்கு **இன்பம்** அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின். 1330

## திருக்குறளில் துன்பவகைப்பாடு

01. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
**துன்ப**த்துள் துப்பு ஆயார் நட்பு. 106

02. கொன்று அன்ன **இன்னா** செயினும் அவர் செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். 109

03. நன்றிக்கு வித்து ஆகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் **இடும்பை** தரும். 138

04. அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு இல்லை இருள் சேர்ந்த
**இன்னா** உலகம் புகல். 243

05. உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு **உறுகண்** செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. 261

06. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் **துன்பம்**
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு. 267

07. இணர்எரி தோய்வன்ன **இன்னா** செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308

08. சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு **இன்னா**
செய்யாமை மாசற்றார் கோள். 311

09. கறுத்து **இன்னா** செய்தவக் கண்ணும் மறுத்து **இன்னா**
செய்யாமை மாசற்றார் கோள். 312

10. செய்யாமல் செற்றார்க்கும் **இன்னாத** செய்த பின்
உய்யா விழுமம் தரும். 313

11. **இன்னா** செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

12. **இன்னா** எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316

13. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை. 317

14. தன்னுயிர்க்கு **இன்னாமை** தான் அறிவான் என் கொலோ
மன் உயிர்க்கு **இன்னா** செயல். 318

15. பிறர்க்கு **இன்னா** முற்பகல் செய்யின் தமக்கு **இன்னா**
பிற்பகல் தாமே வரும். 319

16. பற்றி விடாஅ **இடும்பைகள்** பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347

17. இன்பம் இடையறாது ஈண்டும் அவா என்னும்
**துன்பத்துள் துன்பம்** கெடின். 369

18. நல்லார் கண்பட்ட வறுமையின் **இன்னாதே**
கல்லார்கண் பட்ட திரு. 408

19. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா **இடும்மை** தரும். 508

20. தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா **இடும்மை** தரும். 510

21. **அல்லற்பட்டு** ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 555

22. இன்மையின் **இன்னாது** உடைமை முறை செய்யா
மன்னவன் கோல்கீழ்ப்படின். 558

23. இறைகடியன் என்று உரைக்கும் **இன்னாச்** சொல் வேந்தன்
உறை கடுகி ஒல்லைக் கெடும். 564

24. அருஞ்செவ்வி **இன்னா**முகத்தான் பெருஞ்செல்வம்
பேய்கண் டன்னது உடைத்து. 565

25. இன்பம் விழையான் வினை விழைவான் தன் கேளிர்
**துன்பம்** துடைத்து ஊன்றும் தூண். 615

26. **இடுக்கண்** வருங்கால் நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல். 621

27. வெள்ளத்து அனைய **இடும்மை** அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 622

28. **இடும்பைக்கு இடும்பை** படுப்பர் **இடும்பைக்கு**
**இடும்பை** படாஅ தவர். 623

29. மடுத்தவாய் எல்லாம் பகடு அன்னான் உற்ற
**இடுக்கண் இடர்ப்பாடு** உடைத்து. 624

30. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
**இடுக்கண் இடுக்கண்** படும். 625

31. இலக்கம் உடம்பு **இடும்பைக்கு** என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். 627

32. இன்பம் விழையான் **இடும்மை** இயல்பு என்பான்
**துன்பம்** உறுதல் இலன். 628

33. இன்பத்துள் இன்பம் விழையாதான் **துன்பத்துள்**
**துன்பம்** உறுதல் இலன். 629

34. **இன்னாமை** இன்பம் எனக் கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

34. **இடுக்கண்** படினும் இழிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 654

35. **துன்பம்** உறவரினும் செய்க துணிவு ஆற்றி
இன்பம் பயக்கும் வினை. 669

36. உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே
**இடுக்கண்** களைவதாம் நட்பு. 788

37. கனவினும் **இன்னாது** மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 819

38. பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின் கண்
**பீழை** தருவது ஒன்று இல். 839

39. அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் **பீழை**
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

40. பகல் கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
**இன்னா** செய்யாமை தலை. 852

41. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல் என்னும்
**துன்பத்துள் துன்பம்** கெடின். 854

42. நிழல் நீரும் **இன்னாத இன்னா** தமர் நீரும்
**இன்னா**வாம் **இன்னா** செயின். 881

43. மனம் மாணா உட்பகை தோன்றின் இனம் மாணா
ஏதம் பலவும் தரும். 884

44. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா **இடும்பை** தரும். 892

45. பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள் கெடுத்து
**அல்லல்** உழப்பிக்கும் சூது. 938

46. **இன்னா** செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 987

47. ஏதம் பெருஞ் செல்வம் தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று
ஈதல் இயல்பு இலா தான். 1006

48. **இடும்பை**க்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 1029

49. **இடுக்கண்**கால் கொன்றிட வீழும் அடுத்து ஊன்றும்
நல்லாள் இலாத குடி. 1030

50. இன்மையின் **இன்னாதது** யாது எனின் இன்மையின்
இன்மையே **இன்னாதது**. 1041

51. நல்குரவு என்னும் **இடும்பை**யுள் பல்குரைத்
**துன்பங்கள்** சென்று படும். 1045

52. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
**துன்பம்** உறாஅ வரின். 1052

53. கரப்பு **இடும்மை** இல்லாரைக் காணின் நிரப்பு இடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 1056

54. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பு **இடும்பை**
தானேயும் சாலுங் கரி. 1060

55. இன்மை **இடும்பை** இரந்துதீர்வாம் என்னும்
வன்மையின் வன்பாட்டது இல். 1063

56. **இன்னாது** இனன் இல் ஊர் வாழ்தல் அதனினும்
**இன்னாது** இனியார்ப் பிரிவு. 1158

57. அரிது ஆற்றி **அல்லல்** நோய் நீக்கிப் பிரிவு ஆற்றிப்
பின் இருந்து வாழ்வார் பலர். 1160

58. இன்பம் கடல் மற்றுக் காமம் அஃது அடுங்கால்
**துன்பம்** அதனிற் பெரிது. 1166

59. படல் ஆற்றா **பைதல்** உழக்கும் கடல் ஆற்றாக்
காம நோய் செய்த என் கண். 1175

60. பருவரலும் **பைதலும்** காணான் கொல் காமன்
ஒருவர் கண் நின்று ஒழுகுவான். 1197

61. பனி அரும்பிப் **பைதல்** கொள் மாலை துனி அரும்பித்
துன்பம் வளர வரும். 1223

62. கண்ணின் பசப்போ **பருவரல்** எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 1240

63. நினைத்து ஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்து ஒன்றும்
**எவ்வநோய்** தீர்க்கும் மருந்து. 1241

64. காதலர் அவர் இவராக நீ நோவது
பேதமை வாழிஎன் நெஞ்சு. 1242

65. இருந்து உள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
**பைதல்** நோய் செய்தார்கண் இல். 1243

66. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல் நோய் எல்லாம் கெட. 1266

67. ஒருநாள் எழுநாள் போல் செல்லும் சேண் சென்றார்
வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு. 1269

68. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள் அற்றே கள்வநின் மார்பு. 1288

69. கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான் விதுப்பு உற்று. 1290

70. பெறாஅமை அஞ்சும் பெறின் பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்து என் நெஞ்சு. 1295

71. துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம் உடைய
நெஞ்சம் துணை அல் வழி. 1299

72. புல்லாது இராஅப் புலத்தை அவர் உறும்
அல்லல் நோய் காண்கம் சிறிது. 1301

73. அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால் நம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 1303

74. ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புனர்வது
நீடுவ தன்று கொல் என்று. 1307

75. நோதல் எவன் மற்று நொந்தாரென்று அஃதறியும்
காதலர் இல்லா வழி. 1308

## திருக்குறளில் பேச்சுவகை

01. அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 96

02. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100

03. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

04. அறம் கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம் கூறான் என்றல் இனிது. 181

05. புறம் கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்
அறம் கூறும் ஆக்கம் தரும். 183

06. கண்ணின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். 184

07. அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம் சொல்லும்
புன்மையால் காணப்படும். 185

08. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன் தெரிந்து கூறப் படும். 186

09. பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச் சொல்லி
நட்பு ஆடல் தேற்றா தவர். 187

10. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னை கொல் எதிவார் மாட்டு. 188

11. அறம் நோக்கி ஆற்றும் கொல் வையம் புறன் நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 189

12. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191

13. பயனில பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது. 192

14. நயன் இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை. 193

15. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின் 195

16. நயன் இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன் இல சொல்லாமை நன்று. 197

17. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 198

18. பொருள் தீர்த்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசு அறு காட்சி யவர். 199

19. சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 200

20. இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையான் கண்ணே உள. 223

21. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 232

22. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். 280

23. வாய்மை எனப்படுவது யாது எனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 291

24. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய் வாரின் தலை. 295

25. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கொடுக்கும் தகைமை யவர். 447

26. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 448

27. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 468

28. ஆற்றாரும் ஆற்றி அடுப இடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச் செயின். 493

29. பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. 521

30. புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 538

31. இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச் சொல் வேந்தன்
உறை கடுகி ஒல்லைக் கெடும். 564

32. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 643

33. திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின் ஊஉங்கு இல். 644

34. சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து. 645

35. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 646

36. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்து இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648

37. பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சில சொல்லல் தேற்றா தவர். 649

38. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். 653

39. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664

40. கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி **உரைப்பான்** தலை. 687

41. விடுமாற்றம் வேந்தர்க்கு **உரைப்பான்** வடுமாற்றம்
வாய் சோரா வன்கணவன். 689

42. வேட்பன **சொல்லி** வினைஇல எஞ்ஞான்றும்
கேட்பினும் **சொல்லா** விடல். 697

43. **கூறாமை** நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 701

44. குறித்தது **கூறாமைக்** கொள்வாரோடு ஏனை
உறுப்பு ஓர் அனையரால் வேறு. 704

45. பகைமையும் கேண்மையும் கண் **உரைக்கும்** கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். 709

46. அவை அறியார் **சொல்லல்** மேற் கொள்பவர் **சொல்லின்**
வகை அறியார் வல்லதூஉம் இல். 713

47. உணர்வது உடையார்முன் **சொல்லல்** வளர்வதன்
பாத்தியுள் நீர் சொரிந் தற்று. 718

48. புல் அவையுள் பொச்சாந்தும் **சொல்லற்க** நல் அவையுள்
நன்கு செலச் சொல்லு வார். 719

49. கற்றாருள் கற்றார் எனப்படுபவர் கற்றார்முன்
கற்ற செலச் **சொல்லு வார்**. 722

50. பல்லவை கற்றும் பயம் இலரே நல் அவையுள்
நன்கு செலச் **சொல்லா** தார். 728

51. உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின்
அமைவு அரண் என்று **உரைக்கும்** நூல். 743

52. இல்லாரை எல்லாரும் **எள்ளுவர்** செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 752

53. நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 783

54. நற்பொருள் நன்கு உணர்ந்து **சொல்லினும்** நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 1046

55. ஊரவர் **கௌவை** எருவாக அன்னை சொல்
நீராக நீளும் இந் நோய். 1147

56. தாம் வேண்டின் நல்குவர் காதலர் யாம் வேண்டும்
**கௌவை** எடுக்கும் இவ் வூர். 1150

57. செல்லாமை உண்டேல் எனக்கு **உரை** மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 1151

58. பிரிவு **உரைக்கும்** வன் கண்ண ராயின் அரிது அவர்
நல்குவர் என்னும் நசை. 1156

59. உள்ளுவன் மன்யான் **உரைப்பது** அவர் திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு. 1184

60. உறாஅர்க்கு உறுநோய் **உரைப்பாய்** கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு. 1200

61. கொடியார் கொடுமை **உரைக்கும்** தொடியொடு
தொல் கவின் வாடிய தோள். 1235

62. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கு என்
வாடு தோள் பூசல் **உரைத்து.** 1237

63. நினைத்து ஒன்று **சொல்லாயோ** நெஞ்சே எனைத்துஒன்றும்
எவ்வ நோய் தீர்க்கும் மருந்து. 1241

## திருக்குறளில் பொழுதும் காலமும்

01. **அன்று** அறிவாம் என்னாது அறம் செய்க மற்று அது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 36

02. வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃது ஒருவன்
வாழ்நாள் வழி அடைக்கும் கல். 38

03. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய். 69

04. வருவிருந்து **வைகலும்** ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83

05. சிறுமையுள் நீங்கிய இன்சொல் **மறுமையும்**
**இம்மையும்** இன்பம் தரும். 98

06. **காலத்தினால்** செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

07. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு. 107

08. நன்றி மறப்பது நன்றன்று நன்று அல்லது
**அன்றே** மறப்பது நன்று. 108

09. எளிதுஎன இல் இறப்பான் எய்தும் **எஞ்ஞான்றும்**
விளியாது நிற்கும் பழி. 145

10. ஒறுத்தார்க்கு **ஒருநாளை** இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 156

11. எனைத்தானும் **எஞ்ஞான்றும்** யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 317

12. பிறர்க்கு இன்னா **முற்பகல்** செய்யின் தமக்கு இன்னா
**பிற்பகல்** தாமே வரும். 319

13. **நாள்** என ஒன்று போல் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். 334

14. நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு. 336

15. ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 337

16. அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பு ஈனும் வித்து. 361

17. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 362

18. பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481

19. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. 482

20. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின். 483

21. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின் 484

22. காலங்கருதி இருப்பார் கலங்காது
ஞாலம் கருதுபவர். 485

23. பொள் என ஆங்கே புறம் வேரார் காலம் பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487

24. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 490

25. நாள் தோறும் நாடுக மன்னன் வினை செய்வான்
கோடாமை கோடாது உலகு. 520

26. வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு. 552

27. **நாள்தொறும்** நாடி முறை செய்யா மன்னவன்
நாள் தொறும் நாடு கெடும். 553

28. எல்லார்க்கும் எல்லாம் திகழ்பவை **எஞ்ஞான்றும்**
வல் அறிதல் வேந்தன் தொழில். 582

29. இடுக்கண் **வருங்கால்** நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல். 621

30. கருவியும் **காலமும்** செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. 631

31. பொருள் கருவி **காலம்** வினை இடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல். 675

32. கற்றுக்கண் அஞ்சான் செலச் சொல்லிக் **காலத்தால்**
தக்கது அறிவதாம் தூது. 686

33. கடன் அறிந்து **காலம்** கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை. 687

34. குறிப்பறிந்து **காலம்** கருதி வெறுப்பு இல
வேண்டுப வேட்பச் சொலல். 696

35. வேட்பன சொல்லி வினை இல **எஞ்ஞான்றும்**
கேட்பினும் சொல்லா விடல். 697

36. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் **எஞ்ஞான்றும்**
மாறா நீர் வையக்கு அணி. 701

37. பகை நட்பு ஆம் **காலம் வருங்கால்** முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல். 830

38. **இகல்** என்ப எல்லா உயிர்க்கும் **பகல்** என்னும்
பண்பு இன்மை பாரிக்கும் நோய். 851

39. **பகல்** கருதிப் பற்றா செயினும் **இகல்** கருதி
இன்னா செய் யாமை தலை. 852

40. **இகல்** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 853 - 860

41. நீங்கான் வெகுளி நிறை இலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 864

42. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி. 870

43. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 905

44. எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண் சேர்ந்து ஆம் பேதைமை .இல். 910

45. உட்கப் படாஅர் ஒளி இழப்பார் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டு ஒழுகுவார். 921

46. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர். 926

47. உள் ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள் ஒற்றிக் கண்சாய் பவர். 927

48. கள் உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான் கொல் உண்டதன் சோர்வு. 930

49. நகல் வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள். 999

50. பண்டு அறியேன் கூற்று என்பதனை இனி அறிந்தேன்
பெண் தகையால் பேரமர்க்கட்டு. 1083

51. யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கல்
தான் நோக்கி மெல்ல நகும். 1094

52. வேட்ட பொழுதின் அவை அவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105

53. நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன் இன்று உடையேன்
காயமுற்றார் ஏறும் மடல். 1133

54. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடவொடு
மாலை உழக்கும் துயர். 1135

55. கண்டது மன்னும் ஒருநாள் அவர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று. 1146

56. காமக் கடும் புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். 1167

57. மன் உயிர் எல்லாம் துயிற்றி அளித்து இரா
என் அல்லது இல்லை துணை. 1168

58. கொடியார் கொடுமையின் தாம் கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. 1169

59. மாலையோ அல்லை மணந்தார் உயிர் உண்ணும்
வேலை நீ வாழி பொழுது. 1221

60. புன்கண்ணை வாழி மருள்மாலை எம் கேள் போல்
வன் கண்ணதோநின் துணை. 1222

61. பனி அரும்பிப் பைதல் கொள்மாலை துனி அரும்பி
துன்பம் வளர வரும். 1223

62. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். 1224

63. காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 1225

64. மாலை நோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன். 1226

65. காலை அரும்பியப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய். 1227

66. அழல் போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல் போலும் கொல்லும்படை. 1228

67. மதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 1229

68. பொருள் மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர். 1230

69. வாள் அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாள் ஒற்றித் தேய்ந்த விரல். 1261

70. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல் நோய் எல்லாம் கெட. 1266

71. வினை கலந்து வென்று ஈக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 1268

72. ஒரு நாள் எழுநாள் போல் செல்லும் சேண் சென்றார்
வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு. 1269

73. நெருநற்றுச் சென்றார் எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 1278

74. பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப கண்ணினால்
காம நோய் சொல்லி இரவு. 1280

75. காணுங்கால் காணேன் தவறு ஆய காணாக்கால்
காணேன் தவறு அல்லவை. 1286

76. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தனிய இருந்தது என் நெஞ்சு. 1296

77. புல்லாது இராஅப் புலத்தை அவர் உறும்
அல்லல் நோய் காண்கம் சிறிது. 1301

78. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர் கொண்டனள். 1315

## திருக்குறளில் மக்கள் விளிச் சொற்கள்

01. ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளம் குன்றிக் கால். 14

02. **துறந்தார்** பெருமை துணைக் கூறின் வையத்து
**இறந்தாரை** எண்ணிக்கொண் டற்று. 22

03. நிறைமொழி **மாந்தர்** பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28

04. **அந்தணர்** என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான். 30

05. **இல்வாழ்வான்**என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல் ஆற்றின் நின்ற துணை. 41

06. **துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்**
இவ்வாழ்வான் என்பான் துணை. 42

07. மனைத் தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் **வாழ்க்கைத் துணை**. 51

08. மனைமாட்சி **இல்லாள்** கண் இல்லாயின் வாழ்க்கை
எனை மாட்சித்து ஆயினும் இல். 52

09. இல்லது என் **இல்லவள்** மாண்பானால் உள்ளது என்
**இல்லவள்** மாணாக் கடை. 53

10. **பெண்ணிற்** பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். 54

11. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற் காத்துச் சோர்விலாள் **பெண்**. 56

12. சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் **மகளிர்**
நிறை காக்கும் காப்பே தலை. 57

13. பெற்றான் பெறின் பெறுவர் **பெண்டிர்** பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 58

14. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப்
பண்புடை **மக்கள்** பெறின். 62

15. தம் பொருள் என்ப தம் **மக்கள்** அவர் பொருள்
தம் தம் வினையான் வரும். 63

16. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் **மக்கள்**
சிறுகை அளாவிய கூழ். 64

17. **மக்கள்** மெய் தீண்டல் உடற்கு இன்பம் மற்று அவர்
சொல் கேட்டல் இன்பம் செவிக்கு. 65

18. குழல் இனிது யாழ் இனிது என்பதம் **மக்கள்**
மழலைச் சொல் கேளாதவர். 66

19. **தந்தை** மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 67

20. தம்மின் தம் **மக்கள்** அறிவுடைமை மாநிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது. 68

21. ஈன்ற பொழுதிற் பெருதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட**தாய்**. 69

22. **மகன் தந்தை**க்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என் நோற்றான் சொல்எனும் சொல். 70

23. **செல்விருந்து** ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
**நல்விருந்து** வானத்தவர்க்கு. 86

24. மறவற்க **மாசற்றார்** கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு. 106

25. **வாணிகம் செய்வார்க்கு** வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின். 120

26. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
**செல்வர்க்கே** செல்வம் தகைத்து. 125

27. மறப்பினம் ஒத்துக் கொளல் ஆகும் **பார்ப்பான்**
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும். 134

28. பிறர் மனை நோக்காத பேராண்மை **சான்றோர்க்கு**
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. 148

29. இன்மையுள் இன்மை விருந்து ஒரால் வன்மையுள்
வன்மை **மட வார்ப்** பொறை. 153

30. **ஒறுத்தார்க்கு** ஒரு நாளை இன்பம் **பொறுத்தார்க்குப்**
பொன்றுந் துணையும் புகழ். 156

31. அறன் அறிந்து வெஃகா **அறிவுடையார்ச்** சேரும்
திறன் அறிந்து ஆங்கே திரு. 179

32. **அறங்கூறான்** அல்ல செயினும் **ஒருவன்**
**புறம் கூறான்** என்றல் இனிது. 181

33. **பல்லார்** முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்படும். 191

34. பயன் இல் சொல் பாராட்டுவானை **மகன்** எனல்
மக்கட் பதடி எனல். 196

35. நயன் உடையான் **நல்கூர்ந்தான்** ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா ஆறு. 219

36. **வறியார்க்கு** ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து. 221

37. ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாம் உடைமை
வைத்திழக்கும் **வன்க ணவர்.** 228

38. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே **தமியர்** உணல். 229

39. நிலவரை நீள்புகழ் ஆற்றின் **புலவரைப்**
போற்றாது புத்தேள் உலகு. 234

40. நத்தம் போல் கேடும் உளது ஆகும் சாக்காடும்
**வித்தகர்க்கு** அல்லால் அரிது. 235

41. அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
**பூரியர்** கண்ணும் உள. 241

42. பொருள் நீங்கிப் **பொச்சாந்தார்** என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்து ஒழுகுவார். 246

43. **வலியார்** முன் தன்னை நினைக்கதான் தன்னின்
**மெலியார்** மேல் செல்லும் இடத்து. 250

44. **கொல்லான்** புலாவை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 260

45. **ஒன்னார்த்** தெறலும் **உவந்தாரை** ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 264

46. **தவம் செய்வார்** தம் கருமம் செய்வார் மற்று அல்லார்
**அவம் செய்வார்** ஆசையுள்பட்டு. 266

47. **இவர்** பலராகிய காரணம் நோற்பார்
**சிலர்** பலர் நோலா தவர். 270

48. **வஞ்ச மனத்தான்** படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271

49. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்து ஒழுகும் **மாந்தர்** பலர். 278

50. **கள்வார்க்குத்** தள்ளும் உயிர்நிலை **கள்ளார்க்குத்**
தள்ளாது புத்தேள் உலகு. 290

51. எல்லா விளக்கும் விளக்கல்ல **சான்றோர்க்குப்**
பொய்யா விளக்கே விளக்கு. 299

52. சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை **மாசற்றார்** கோள். 311

53. கறுத்து இன்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 312

54. நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் சான்றோர்க்குக்
கொன்று ஆகும் ஆக்கம் கடை. 328

55. கொலை வினையர் ஆக்கிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து. 329

56. அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர். 365

57. அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃது உண்டேல்
தவா அது மேன்மேல் வரும். 368

58. இரு வேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியார் ஆதலும் வேறு. 374

59. படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381

60. அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. 382

61. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள் பவற்கு. 383

62. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 386

63. முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும். 388

64. செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தாங்கும் உலகு. 389

65. கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி. 390

66. கண் உடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண் உடையர் கல்லாதவர். 393

67. உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 394

68. உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லாத வர். 395

69. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறு அறிவு. 396

70. தாம் இன்புறுவது உலகு இன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 399

71. கல்லாதான் சொல் காமுறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற் றற்று. 402

72. கல்லாதவரும் தனிநல்லர் கற்றார் முன்
சொல்லாது இருக்கப் பெறின். 403

73. கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடையார். 404

74. உளர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லாதவர். 406

75. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னதே
கல்லார் கண் பட்ட திரு. 408

76. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்து இலர் பாடு. 409

77. விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர். 410

78. அறன் அறிந்த மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல். 441

79. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 443

80. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 444

81. சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 445

82. தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானைச்
செற்றார் செயக் கிடந்தது இல். 446

83. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 448

84. பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 450

85. நிலத்து இயல்பால் நீர் திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்து இயல்பதாகும் அறிவு. 452

86. மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான ஆம்
இன்னான் எனப்படும் சொல். 453

87. ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார். 463

88. வகை அறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பது ஓர் ஆறு. 465

89. பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481

90. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. 488

91. சிறுபடையான் செல் இடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 498

92. அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503

93. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் 508

94. தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 510

95. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512

96. எனை வகையான் தேறியக் கண்ணும் வினை வகையான்
வேறாகும் மாந்தர் பலர். 514

97. நாள் தோறும் நாடுக மன்னன் வினை செய்வான்
கோடாமை கோடாது உலகு. 520

98. பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர். 528

99. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்து இருந்து எண்ணிக் கொளல். 530

100. வான் நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி. 542

101. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 543

102. குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544

103. இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. 545

104. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோல் அதூஉம் கோடாது எனின். 546

105. எண்பதத்தான் ஓராமுறை செய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். 548

106. குடிபுறங் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். 549

107. கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 550

108. நாள் தொறும் நாடி முறை செய்யா **மன்னவன்**
நாள் தொறும் நாடு கெடும். 553

109. **மன்னர்க்கு** மன்னுதல் செங்கோன்மை அஃது இன்றேல்
மன்னாவாம் **மன்னர்க்கு** ஒளி. 556

110. துளி இன்மை ஞாலத்திற்கு ஏற்றற்றே **வேந்தன்**
அளி இன்மை வாழும் உயிர்க்கு. 557

111. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
**மன்னவன்** கோல்கீழ்ப் படின். 558

112. முறைகோடி **மன்னவன்** செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559

113. ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூல் மறப்பர்
**காவலன்** காவான் எனின். 560

114. வெருவந்த செய்து ஒழுகும் **வெங்கோலன்** ஆயின்
ஒரு வந்தம் ஒவ்வைக் கெடும். 563

115. இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச் சொல் **வேந்தன்**
உறை கடுகி ஒல்லைக் கெடும். 564

116. கடுமொழியும் கை இகந்த தண்டமும் **வேந்தன்**
அடுமுரண் தேய்க்கும் அறம். 567

117. இனத்து ஆற்றி எண்ணாத **வேந்தன்** சினத்து ஆற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568

118. செருவந்த போழ்தில் சிறை செய்யா **வேந்தன்**
வெருவந்து வெய்து கெடும். 569

119. ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும்
தெற்று என்க **மன்னவன்** கண். 581

120. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல் அறிதல் **வேந்தன்** தொழில். 582

121. ஒன்றினாள் ஒற்றிப் பொருள்தெரியா **மன்னவன்**
கொற்றம் கொளக் கிடந்தது இல். 583

122. வினை செய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. 584

123. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு. 595

124. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமைப் புகுத்தி விடும். 608

125. மடி இலா மன்னவன் எய்தும் அடி அளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 610

126. இன்னாமை இன்பம் எனக் கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

127. பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்ஓர்
எழுபது கோடி பெறும். 639

128. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 646

129. ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656

130. பழி மலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழி நல்குரவே தலை. 657

131. வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன் கண்
ஊறு எய்தி உள்ளப்படும். 665

132. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். 679

133. உறை சிறியார் உள் நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

134. நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினை உரைப்பான் பண்பு. 683

135. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய் சோரா வன்க ணவன். 689

136. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல் **வேந்தர்ச்** சேர்ந்து ஒழுகு வார். 691

137. மன்னர் விழைப விழையாமை **மன்னரால்**
மன்னிய ஆக்கம் தரும். 692

138. **இளையர் இனமுறையர்** என்று இகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப்படும். 698

139. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம் **கணத்தர்**
அல்லார்முன் கோட்டி கொளல். 720

140. **கற்றாருள் கற்றார்** எனப்படுபவர் **கற்றார்** முன்
கற்ற செலச் சொல்லுவார். 722

141. **கற்றார்** முன் கற்ற செலச் சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 724

142. வாளொடு என் **வன் கண்ணர்** அல்லார்க்கு நூலொடு என்
நுண் அவை அஞ்சு பவர்க்கு. 726

143. **கல்லாதவரின்** கடை என்ப கற்றறிந்தும்
**நல்லார்** அவை அஞ்சு வார். 729

144. என்னை முன் நில்லன்மின் **தெவ்விர்** பலர் என்னை
முன் நின்று கல் நின்றவர். 771

145. உறினுயிர் அஞ்சா **மறவர் இறைவன்**
செறினும் சீர் குன்றல் இவர். 778

146. புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்கின் சாக்காடு
இரந்து கோள் தக்கது உடைத்து. 780

147. நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர **பேதையர்** நட்பு. 782

148. நவில் தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
**பண்புடை யாளர்** தொடர்பு. 783

149. அழச் சொல்லி அல்லது இடித்து வழக்கு அறிய
**வல்லார்** நட்பு ஆய்ந்து கொளல். 795

150. கேட்டினும் உண்டு ஓர் உறுதி **கிளைஞரை**
நீட்டி அளப்பது ஓர் கோல். 796

151. ஊதியம் என்பது ஒருவற்குப் **பேதையார்**
கேண்மை ஒரீஇ விடல். 797

152. மருவுக **மாசற்றார்** கேண்மை ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்புஇலார் நட்பு. 800

153. நட்புக்கு உறுப்பு கெழுதகைமை மற்று அதற்கு
உப்பு ஆதல் **சான்றோர்** கடன். 802

154. கெடாஅ வழிவந்த **கேண்மையர்** கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 809

155. **விழையார்** விழையப் படுப **பழையார்** கண்
பண்பின் தலைப்பிரியாதார். 810

156. உறுவது சீர் தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் **கள்வரும்** நேர். 813

157. அமர் அகத்து ஆற்று அறுக்கும் கல்லாமா அன்னார்
**தமரின்** தனிமை தலை. 814

158. செய்து ஏமம் சாராச் **சிறியவர்** புன்கேண்மை
எய்தவின் எய்தாமை நன்று. 815

159. நகைவகையர் ஆகிய நட்பின் **பகைவரால்**
பத்தடுத்த கோடி உறும். 817

160. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் **பழிப்பார்** தொடர்பு. 820

161. நட்டார் போல் நல்லவை சொல்லினும் **ஒட்டார்** சொல்
ஒவ்வை உணரப்படும். 826

162. தொழுதகை உள்ளும் படை ஒடுங்கும் **ஒன்னார்**
அழுத கண்ணீரும் அனைத்து. 828

163. ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காப்
பேதையின் பேதையார் இல். 834

164. எதிவார் ஆரத் தமர் பசிப்பார் பேதை
பெருஞ் செல்வம் உற்றக்கடை. 837

165. பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின் கண்
பீழை தருவது ஒன்று இல். 839

166. அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

167. உலகத்தார் உண்டென்பது இல் என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 850

168. வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 861

169. வழிநோக்கான் வாய்ப்பான செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. 865

170. காணாச் சினத்தான் கழி பெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 866

171. செறுவார்க்குச் சேண் இகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 869

172. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒவ்வானை ஒவ்வாது ஒளி. 870

173. வில் ஏர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல் ஏர் உழவர் பகை. 872

174. ஏமுற்ற வரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகை கொள்பவன். 873

175. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து. 877

176. வகை அறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
**பகைவர்** கண் பட்ட செருக்கு. 878

177. வாள் போல் **பகைவரை** அஞ்சற்க அஞ்சுக
கேள் போல் **பகைவர்** தொடர்பு. 882

178. **பெரியாரைப்** பேணாது ஒழுகின் **பெரியாரால்**
பேரா இடும்பை தரும். 892

179. யாண்டுச் சென்று யாண்டும் உளர் ஆகார் வெந்துப்பின்
**வேந்து** செறப் பட்டவர். 895

180. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
**பெரியார்ப்** பிழைத்து ஒழுகுவார். 896

181. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
**வேந்தனும்** வேந்து கெடும். 899

182. பேணாது **பெண்விழைவான்** ஆக்கம் பெரிதோர்
நாணாக நாணுத் தரும். 902

183. **இல்லாள்** கண் தாழ்ந்த இயல்பு இன்மை எஞ்ஞான்றும்
**நல்லாருள்** நாணுத் தரும். 903

184. **மனையாளை** அஞ்சும் மறுமையி லாளன்
வினை ஆண்மை வீறு எய்தல் இன்று. 904

185. **இல்லாளை** அஞ்சுவான் அஞ்சும் மற்றும் எஞ்ஞான்றும்
**நல்லார்க்கு** நல்ல செயல். 905

186. இமையாரின் வாழினும் பாடு இலரே **இல்லாள்**
அமையார் தோள் அஞ்சுபவர். 906

187. **பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் நாண் உடைப்**
**பெண்ணே** பெருமை உடைத்து. 907

188. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
**பெண் ஏவல் செய்வார்** கண் இல். 909

189. எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு எஞ்ஞான்றும்
**பெண்** சேர்ந்து ஆம் பேதமை இல். 910

190. அன்பின் விழையார் பொருள் விழையும் **ஆய்தொடியார்**
இன்சொல் இழுக்குத் தரும். 911

191. பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பில் **மகளிர்**
நயன் தூக்கி நள்ளா விடல். 912

192. **பொருட்பெண்டிர்** பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று. 913

193. ஆயும் அறிவினர் அல்லார்க்கு **அணங்கு** என்ப
**மாய மகளிர்** முயக்கு. 918

194. வரைவு இலா மாண் இழையார் மென்தோள் புரை இலாப்
**பூரியர்கள்** ஆழும் அளறு. 919

195. **இருமனப் பெண்டிரும்** கள்ளும் கவறும்
திரு நீக்கப்பட்டார் தொடர்பு. 920

196. உண்ணற்க கள்ளை உணில் உண்க **சான்றோரால்**
எண்ணப்பட வேண்டாதார். 922

197. **ஈன்றாள்** முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச்
**சான்றோர்** முகத்துக் களி. 923

198. நாண் என்னும் **நல்லாள்** புறங்கொடுக்கும் கள் என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924

199. **துஞ்சினார் செத்தாரின்** வேறல்லர் எஞ்ஞான்றும்
**நஞ்சுண்பார்** கள் உண்பவர். 926

200. ஒன்று எய்தி நூறு இழக்கும் **சூதர்க்கும்** உண்டாங்கொல்
நன்று எய்தி வாழ்வது ஓர் ஆறு. 932

201. **உற்றான்** அளவும் பிணி அளவும் காலமும்
**கற்றான்** கருதிச் செயல். 949

202. உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வான் என்று
அப்பால் நாற் கூற்றே மருந்து. 950

203. இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 951

204. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந்தார். 952

205. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இவர். 954

206. குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957

207. நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல். 959

208. தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964

209. புகழ் இன்றால் புத்தேள் நாட்டு உய்யாதால் என் மற்று
இகழ்வார் பின் சென்று நிலை. 966

210. ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

211. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத் தான் கொண்டு ஒழுகின் உண்டு. 974

212. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம் என்னும் நோக்க. 976

213. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று. 982

214. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

215. உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993

216. பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996

217. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம் தீமை யால்திரிந் தற்று. 1000

218. வைத்தான் வாய் சான்ற பெரும் பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக் கிடந்தது இல். 1001

219. ஈட்டம் இவறி இசை வேண்டத ஆடவர்
தோற்றம் நிலைக்குப் பொறை. 1003

220. அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள் மூத் தற்று. 1007

221. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறம் கூர்ந் தனையது உடைத்து. 1010

222. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1011

223. ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல
நான் உடைமை மாந்தர் சிறப்பு. 1012

224. அணியன்றோ நாணுடைமை சாந்றோர்க்கு அஃது இன்றேல்
பிணி அன்றோ பீடு நடை. 1014

225. அமர் அகத்து வன்கண்ணர் போலத் தமர் அகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 1027

226. குடி செய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். 1028

227. இடுக்கண் கால் கொன்றிட வீழும் அடுத்து ஊன்றும்
நல்லாள் இல்லாத குடி. 1030

228. உழுவார் உலகத்திற்கு ஆணி அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. 1032

229. இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவாது
கைசெய்து ஊண் மாலை யவர். 1035

230. **உழவினார்** கைமடங்கின் **இல்லை** விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும்நிலை. 1036

231. செல்லான் **கிழவன்** இருப்பின் நிலம் புலந்து
**இல்லாளின்** ஊடி விடும். 1039

232. இலம் என்று **அசைஇ இருப்பாரைக்** காணிள்
நிலம் என்னும் **நல்லாள்** நகும். 1040

233. நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் **நல்கூர்ந்தார்**
சொற் பொருள் சோர்வு படும். 1046

234. **கரப்பு இலார்** வையகத்து உண்மையான் கண்நின்று
**இரப்பவர்** மேற் கொள்வது. 1055

235. இகழ்ந்து எள்ளாது **ஈவாரைக்** காணின் மகிழ்ந்து உள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து. 1057

236. **இரப்பாரை** இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்று வந் தற்று. 1058

237. **இரப்பான்** வெகுளாமை வேண்டும் நிரப்பு இடும்பை
தானேயும் சாலுங் கரி. 1060

238. **இரப்பான் இரப்பாரை** எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று. 1067

239. **கரப்பவர்க்கு** யாங்கு ஒளிக்கும் கொல்வோ **இரப்பவர்**
சொல்லாடப் போஒம் உயிர். 1070

240. மக்களே போல்வர் **கயவர்** அவர் அன்ன
ஒப்பாரி யாம் கண்டது இல். 1071

241. நன்று அறிவாரின் **கயவர் திருவுடையர்**
நெஞ்சத்து அவலம் இலர். 1072

242. **தேவர்** அனையர் **கயவர்** அவரும் தாம்
மேவன செய்து ஒழுக வான். 1073

243. அச்சமே **கீழ்களது** ஆசாரம் எச்சம்
அவா உண்டேல் உண்டாம் சிறிது. 1075

244. அறைபறை அன்னர் **கயவர்** தாம் கேட்ட
மறை பிறர்க்கு உய்த்து உரைக்க லான். 1076

245. ஈரங்கை விதிரார் **கயவர்** கொடிறுடைக்கும்
கூன் **கையர்** அல்லாத வர்க்கு. 1077

246. சொல்லப் பயன்படுவோர் **சான்றோர்** கரும்பு போல்
கொல்லப் பயன்படும் கீழ். 1078

247. எற்றிற்கும் உரியர் **கயவர்** ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து. 1080

248. **அணங்கு** கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
**மாதர்** கொல் மாலும் என் நெஞ்சு. 1081

249. பண்டு அறியேன் கூற்று என்பதனை இனி அறிந்தேன்
**பெண்** தகையால் பேரமர்க் கட்டு. 1083

250. கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தால் **பெண்தகைப்**
**பேதைக்கு** அமர்த்தன கண். 1084

251. கூற்றமோ கண்ணோ பிணையோ **மடவரல்**
நோக்கம் இம்மூன்றும் உடைத்து. 1085

252. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் **மாதர்**
படாஅ முலை மேல் துகில். 1087

253. செறா அச் சிறு சொல்லும் **செற்றார்** போல் நோக்கும்
உறாஅர் போன்று **உற்றார்** குறிப்பு. 1097

254. **எதிலவார்** போலப் பொதுநோக்க நோக்குதல்
**காதலர்** கண்ணே உள. 1099

255. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்
**ஒன்தொடி** கண்ணே உள. 1101

256. பிணிக்கு மருந்து பிறமன் **அணியிழை**
தன் நோய்க்குத் தானே மருந்து. 1102

257. உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டலால் **பேதைக்கு**
அமிழ்தின் இயன்றன தோள். 1106

258. தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால்
அம்மா **அரிவை** முயக்கு. 1107

259. அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறி தோறும் **சேயிழை** மாட்டு. 1110

260. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ **மாதர்** முகத்து. 1117

261. **மாதர்** முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 1118

262. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் **மாதர்**
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120

263. பாலொடு தேன் கலந் தற்றே **பணிமொழி**
வால் எயிறு ஊறிய நீர். 1121

263. உடம்பொடு உயிரிடை என்ன மற்று அன்ன
**மடந்தை**யொடு எம்மிடை நட்பு. 1122

244. கருமணியிற் பாவாய் நீ போதாயாம் வீழும்
**திரு நுதற்கு** இல்லை இடம். 1123

265 வாழ்தல் உயிர்க்கு அன்னள் **ஆயிழை** சாதல்
அதற்கு அன்னள் நீங்கும் இடத்து. 1124

266 கண்ணுள்ளிற் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர் எம் **காத லவர்**. 1126

267 கண்ணுள்ளார் **காதலவராகக்** கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. 1127

268. நெஞ்சத்தார் **காதலவராக** வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 1128

269. இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
**ஏதிலர்** என்னும் இவ்வூர். 1129

270. உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகழ்ந்துறைவர்
**ஏதிலர்** என்னும் இவ் வூர். 1130

271 நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன் இன்று உடையேன்
**காமுற்றார்** ஏறும் மடல். 1133

272 தொடலைக் **குறுந்தொடி** தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். 1135

273 மடல் ஊர்தல் யாமந்தும் உள்ளுவேன் மன்ற
படல் ஒல்லா **பேதைக்கு** என் கண். 1136

274 கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப்
**பெண்ணிற்** பெருந் தக்கது இல். 1137

275 ஊரவர் கௌவை எருவாக **அன்னை** சொல்
நீராக நீளும் இந் நோய். 1147

276 தாம் வேண்டின் நல்குவர் **காதலர்** யாம் வேண்டும்
கௌவை எடுக்கும் இவ் வூர். 1150

277. அரிதரோ தேற்றம் **அறிவுடையார்** கண்ணும்
பிரிவு ஓர் இடத்துண்மை யான். 1153

278 பிரிவு உரைக்கும் **வண்கண்ணராயின்** அரிது அவர்
நல்குவர் என்னும் நசை. 1156

279 இன்னாது இனன் இல் ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது **இனியார்ப்** பிரிவு. 1158

280 **கொடியார்** கொடுமையின் தாம் கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா, 1169

281 பேணாது பெட்டார் உளர் மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண். 1178

282 மறை பெறல் **ஊரார்க்கு** அரிதன்றால் எம்போல்
அறை பறை கண்ணார் அகத்து. 1180

283 உவக்காண் எம் **காதலர்** செல்வார் இவக்காண் என்
மேனி பசப்பு ஊர்வது. 1185

284 விளக்கு அற்றம் பார்க்கும் இருளே போல் **கொண்கன்**
முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு. 1186

285 வீழ்வாரின் இன்சொல் பெறா அது உலகத்து
வாழ்வாரில் வன்கணார் இல். 1198

286 எனைத்து நினைப்பினும் காயார் அனைத்து அன்றோ
காதலர் செய்யும் சிறப்பு. 1208

287 காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய் வேன்கொல் விருந்து. 1211

288 நனவு என ஒன்று இல்லை ஆயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன். 1216

289 நனவினான் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர். 1219

290 காதலர் இல்வழி மாலை கொலைக் களத்து
ஏதிலர் போல வரும். 1224

291 அழல் போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல் போலும் கொல்லும் படை. 1228

292 கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 1235

293 தொடியொரு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக் கூறல் நொந்து. 1236

294 பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கு என்
வாடு தோள் பூசல் உரைத்து. 1237

295 செற்றார் எனக்கை விடல் உண்டோ நெஞ்சே யாம்
உற்றால் உறாஅ தவர். 1245

296 கலந்து உணர்த்துக் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தி என் நெஞ்சு. 1246

297 உள்ளத்தார் காதலவர் ஆக உள்ளி நீ
யார் உழைச் சேறி என் நெஞ்சு. 1249

298 செற்றார் பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவது ஒன்று அன்று. 1255

299. செற்றவர் பின்றேல் வேண்டி அளித்து அரோ
எற்று என்னை உற்ற துயர். (1256)

300. பன் மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. (1258)

301. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல் நோய் எல்லாம் கெட. (1266)

302. புலப்பேன் கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன் கொல்
கண் அன்ன கேளிர் வரின். (1267)

303. வினை கலந்து வென்று ஈக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. (1268)

304. கண்நிறைந்த காரிகைக் காம்பு ஏர்தோள் பேதைக்குப்
பெண் நிறைந்த நீர்மை பெரிது. (1272)

305. மணியுள் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வது ஒன்று உண்டு. (1273)

306. தண்ணந்துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. (1277)

307. நெருநற்றுச் சென்றார் எம் காதலர் யாமும்
எழு நாளேம் மேனி பசந்து. (1278)

308. பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப கண்ணினால்
காம நோய் சொல்லி இரவு. (1280)

309. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். (1283)

310. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள் அற்றே கள்வ நின் மார்பு. (1288)

311. தஞ்சர் தமர் அல்லர் ஏதிலார் தாம் உடைய
நெஞ்சம் தமர் அல் வழி. (1300)

312. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூ அன்ன கண்ணார் அகத்து. (1305)

313. நோதல் எவள் மற்று நொந்தாரென்று அஃதறியும்
காதலர் இல்லா வழி. (1308)

314. பெண் இயலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்
நண்ணேன் பரத்த நின் மார்பு. (1311)

315. கோட்டுப் பூச்சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. (1313)

316. தும்மச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. (1318)

# திருக்குறளில் தொழிற்கருவிகள்

01. **ஏரின்** உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளங்குன்றிக் கால். (14)

02. உரன் என்னும் **தோட்டியான்** ஓர் ஐந்தும் காப்பான்.
வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து (24)

03. அறத்தாறு இதுஎன வேண்டா **சிவிகை**
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (37)

04. **குழல்**இனிது **யாழ்**இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதீ வர். (66)

05. கால் ஆழ் களரின் நரிஅடும் கண் அஞ்சா
**வேல்** ஆள் முகத்த களிறு. (500)

06. **வேலொடு** நின்றான் இடுஎன் றது போலும்
கோலொடு நின்றான் இரவு. (552)

07. **வேலன்று** வென்றி தருவது மன்னவன்
கோல் அதூஉம் கோடாது எனின். (546)

08. **வாளொடு**என் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடு என்
நுண் அவை அஞ்சு பவர்க்கு. (726)

09. கானமுயல் எய்த **அம்பினில்** யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது. (772)

10. கை**வேல்** களிற்றொடு போக்கி வருபவன்
மெய்**வேல்** பறியா நகும். (774)

11. **வில்ஏர்** உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல் **ஏர்** உழவர் பகை. (872)

12. சொல் வணக்கம் ஒன்னார் கண் கொள்ளற்க **வில்** வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (827)

13. **வாள்**போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள் போல் பகைவர் தொடர்பு. (882)

14. அரம் பொருத பொன்போலத் தேயும் உரம் பொருது
உட்பகை உற்ற குடி. (888)

15. வேண்டற்க வென்றிடினும் குதிரை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. (931)

16. அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர். (997)

17. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (1031)

18. ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு. (1038)

19. இரவு என்னும் ஏமாப்புஇல் தோணி கரவு என்னும்
பார் தாக்கப் பக்கு விடும். (1068)

20. அறை பறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறை பிறர்க்கு உய்த்து உரைக்க லான். (1076)

21. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல் உண்கண் வேய்த்தோ ளவட்கு (1113)

22. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. (1134)

23. மறை பெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து. (1180)

24. காமக் கணிச்சி உடைக்கும் நிறை என்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (1251)

25. கணை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன
வினைபடு பாலால் கொளல். (279)

# திருக்குறளில் விலங்குகள்

01. புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறு போல் பீடு நடை. (59)

02. ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (126)

03. வலிஇல் நிலைமையான் வல் உருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்துமேய்ந் தற்று. (273)

04. விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர். (410)

05. நெடும் புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (495)

06. கால் ஆழ் களரின் நரி அடும் கண் அஞ்சா
வேல் ஆள் முகத்த களிறு. (500)

07. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெருஉம் புலி தாக்குறின். (599)

08. வினையால் வினையாக்கிக் கோடல் நனை கவுள்
யானையால் யானையாத் தற்று. (678)

09. கான முயல் எய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது. (772)

10. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (774)

11. மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின். (969)

12. கடாஅக் களிற்றின் மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். (1087)

## திருக்குறளில் இயற்கை

01. மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார். (குறள் : 3)

02. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லாவ்
பிறவாழி நீந்தல் அரிது. (குறள் : 8)

03. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார். (குறள் : 10)

04. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று. (குறள் : 11)

05. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாயதூஉம் மழை. (குறள் : 12)

06. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின் றுடற்றும் பசி. (குறள் : 13)

07. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றியக் கால். (குறள் : 14)

08. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற்றாங்கே
எடுப்பதூஎம் எல்லாம் மழை. (குறள் : 15)

09. விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. (குறள் : 16)

10. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்கா தாகி விடின். (குறள் : 17)

11. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. (குறள் : 18)

12. தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின் (குறள் : 19)

13. நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு (குறள் : 20)

14. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (குறள் : 25)

15. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும். (குறள் : 28)

16. குணமெனுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. (குறள் : 29)

17. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். (குறள் : 50)

18. தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதொழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. (குறள் : 55)

19. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (குறள் : 68)

20. என்பிலதனை வெயில் கோலக் காயுமே
அன்பிலதனை அறம். (குறள் : 77)

21. அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று. (குறள் : 78)

22. மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (குறள் : 90)

23. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. (குறள் : 100)

24. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (குறள் : 101)

25. பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலில் பெரிது. (குறள் : 103)

26. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. (குறள் : 124)

27. நலக்குரியர் யாரெனின் **நாமநீர்** வைப்பின்
பிறற்குரியாள் தோள் தோயா தார். (குறள் : 149)

28. அகழ்வாரைத் தாங்கும் **நிலம்** போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (குறள் : 151)

29. கைமாறு வேண்டா கடப்பாடு **மாரி** மாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு. (குறள் : 211)

30. ஊருணி **நீர்** நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (குறள் : 215)

31. பயன் **மரம்** உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். (குறள் : 216)

32. மருந்தாகித்தப்பா **மரத்**தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண் படின். (குறள் : 217)

33. தவமறைந்து அல்லவை செய்தல் **புதல்**மறைந்து
வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று. (குறள்: 274)

34. புறந்தூய்மை **நீரான்** அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும். (குறள் : 298)

35. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
**வானம்** நணிய துடைத்து. (குறள் : 353)

36. இருவேறு உலகத்து **இயற்கை** திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. (குறள் : 406)

37. தொட்டனைத் தூறும் **மணற்கேணி** மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (குறள் : 396)

38. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
**களர**னையர் கல்லா தவர். (குறள் : 406)

39. தினைத்துணையாங் குற்றம் வரினும் **பனைத்**துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (குறள் : 433)

40. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (குறள் : 435)

41. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு. (குறள் : 465)

42. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்தூக்கின்
உயர்க்கிறுதி ஆகி விடும். (குறள் : 476)

43. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (குறள் : 495)

44. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. (குறள் : 496)

45. சிறை நலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறை நிலத்தோடு ஒட்டல் அரிது. (குறள் : 499)

46. காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்தகளிறு. (குறள் : 500)

47. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி. (குறள் : 542)

48. இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் காட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. (குறள் : 545)

49. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனொடு நேர். (குறள் : 550)

50. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (குறள் : 559)

51. மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்து கண்ணோட தவர். (குறள் : 576)

52. வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு. (குறள் : 595)

53. உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலார்
மரமக்க ளாதலே வேறு. (குறள் : 600)

54. வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். (குறள் : 622)

55. இணரூழ்ந்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார். (குறள் : 650)

56. சலத்தால் பொருள் செய்தே ஏமார்த்தல் பசுமண்
கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று. (குறள் : 660)

57. ஒளியார் முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான் சுதை வண்ணம் கொளல். (குறள் : 714)

58. உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர் சொரிந்தற்று. (குறள் : 718)

59. இருபுனலும் வாய்ந்தமலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. (குறள் : 737)

60. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண். (குறள் : 742)

61. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. (குறள் : 758)

62. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். (குறள் : 763)

63. நிறைநீர் நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு (குறள் : 782)

64. இளைது ஆகமுள்மரம் கொல்க களையுகர்
கை கொல்லும் காழ்த்த இடத்து. (குறள் : 879)

65. நிழல்நீரும் இன்னாத இன்னாதமர் நீரும்
இன்னா ஆம் இன்னா செயின். (குறள் : 881)

66. குன்று அன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. (குறள் : 898)

67. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீ இயற்று. (குறள் : 929)

68. மிகினும் குறையிலும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று. (குறள் : 941)

69. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். (குறள் : 947)

70. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. (குறள் : 957)

71. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல். (குறள் : 959)

72. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். (குறள் : 965)

73. ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். (குறள் : 989)

74. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. (குறள் : 990)

75. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர். (குறள் : 997)

76. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிருஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள். (குறள் : 999)

77. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. (குறள் : 1003)

78. நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம் பழுத்தற்று. (குறள் : 1008)

79. சீருடைச் செல்வர் சிறுதுளி மாரி
வறங் கூர்ந்த னைய துடைத்து. (குறள் : 1010)

80. ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. (குறள் : 1038)

81. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். (குறள் : 1039)

82. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். (குறள் : 1040)

83. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. (குறள் : 1049)

84. தெண்ணீர் அடு புற்கை யாயினுந் தாள்தந்து
உ ண்ணலின் ஊங்கிணியது இல். (குறள் : 1065)

85. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். (குறள் : 1066)

86. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார் தாக்கப் பக்குவிடும். (குறள் : 1068)

87. சொல்லப்பயன்படுவோர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். (குறள் : 1078)

88. தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. (குறள் : 129)

89. யான் நோக்குங் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்லநகும். (குறள் : 1094)

90. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீ யாண்டுப் பெற்றாள் இவள். (குறள் : 1104)

91. வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. (குறள் : 1108)

92. மலர் காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. (குறள் : 1112)

93. காணிற் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. (குறள் : 1114)

94. அனிச்சம்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. (குறள் : 1115)

95. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். (குறள் : 1116)

96. அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர்முகத்து. (குறள் : 1117)

97. மாதர்முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. (குறள் : 1118)

98. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர் காணத் தோன்றல் மதி. (குறள் : 1119)

99. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (குறள் : 1120)

100. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. (குறள் : 1134)

101. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல். (குறள் : 1137)

102. மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்தவ்வூர். (குறள் : 1142)

103. கண்டது மன்னும் ஒருநாள் அவர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று. (குறள் : 1146)

104. ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்
நீராக நீளும் இந்நோய். (குறள் : 1147)

105. நெய்யால் எரி நுதுப்போம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனில். (குறள் : 1148)

106. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்று நீர் போல மிகும். (குறள் : 1161)

107. காமக் கடல் மன்னும் உண்டே அது நீந்தும்
ஏமப்புணை மன்னும் இல் (குறள் : 1164)

108. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனில் பெரிது. (குறள் : 1166)

109. காமக் கடும் புனல் நீந்திக் கரை காணேன்
யாமத்தும் யானே உளேன். (குறள் : 1167)

110. கொடியார் கொடுமையின் தாம் கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. (குறள் : 1169)

111. உள்ளம் போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோ என் கண். (குறள் : 1170)

112. பெயலாற்றா நீருலர்ந்த உண்கண் உயவாற்றா
உய்வில் நோய் என் கண் நிறுத்து. (குறள் : 1174)

113. படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்த என் கண். (குறள் : 1175)

114. உழந்துழந்த உள் நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க் கண்ட கண். (குறள் : 1117)

115. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. (குறள் : 1186)

116. தாம்வீழ்வார் தாம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. (குறள் : 1191)

117. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. (குறள் : 1192)

118. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு. (குறள் : 1200)

120. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி. (குறள் : 1210)

121. மாலையோ அல்லை மணந்தார் உயிர் உண்ணும்
வேலைநீ வாழி பொழுது. (குறள் : 1221)

122. புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன் கண்ண தோநின்துணை. (குறள் : 1222)

123. பனி அரும்பிப் பைதல்கொள் மாலை துனி அரும்பித்
துன்பம் வளர வரும். (குறள் : 1223)

122. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். (குறள் : 1224)

123. காலைக்குச் செய்த நன்று என் கொல் எவன் கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. (குறள் : 1225)

124. மாலை நோய் செய்தல மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன். (குறள் : 1226)

125. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய் (குறள் : 1227)

126. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல் போலும் கொல்லும்படை. (குறள் : 1228)

127. மதிமருண்டு பைதல் உழக்கும் மதி மருண்டு
மாலை படர்தரும் போழ்து. (குறள் : 1229)

128. பொருள் மாலை யாளரை உள்ளி மருள் மாலை
மாயும் என் மாயா உயிர். (குறள் : 1230)

129. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். (குறள் : 1231)

130. நயந்தவர் நல்காமை சொல்லுவப் போலும்
பசந்து பனி வாரும் கண். (குறள் : 1232)

131. முயக்கிடைத் தண்வளி போழப்பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். (குறள் : 1239)

132. காமம் என ஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். (குறள் : 1252)

133. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்போம் எனல். (குறள் : 1260)

134. வினை கலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. (குறள் : 1268)

135. முகை மொக்குள் உள்ளது நாற்றம் போல்
நகை மொக்குள் உள்ளதொன்று உண்டு. (குறள் : 1274)

136. பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. (குறள் : 1280)

137. உய்த்தல் அறிந்து புனல் பாய் பவரே போல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து. (குறள் : 1287)

138. மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப் படுவார். (குறள் : 1289)

139. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. (குறள் : 1304)

140. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூ வன்ன கண்ணார் அகத்து. (குறள் : 1305)

141. துணியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. (குறள் : 1306)

142. நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. (குறள் : 1309)

143. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. (குறள் : 1313)

1) மலர்
2) நிலம்
3) ஆழி
4) கடல்
5) வான்
6) மழை
7) விண்
8) புயல்
9) மாரி
10) விசும்பு
11) துளி
12) எழிலி
13) குன்று
14) வெயில்
15) பாலை
16) மரம்
17) அனிச்சம்
18) காய்
19) கனி
20) மாலை
21) நீர்
22) புதல்
23) இயற்கை
24) கேணி
25) களர்
26) பனை
27) வைத்தூறு
28) பாத்தி
29) கொம்பர்
30) புனல்
31) பெயல்
32) விளையுள்
33) மண்
34) வெள்ளம்
35) மலர்
36) வான்சுதை
37) நிழல்
38) காடு
39) உவரி
40) பிறைமதி
41) வளி
42) தீ
43) பகல்
44) இருள்
45) நெருப்பு
46) பார்
47) கரும்பு
48) தீ
49) பூ
50) குவளை
51) அனிச்சம்
52) மதி
53) நெருஞ்சிப்பழம்
54) திங்கள்
55) எரி
56) இரா
57) கனி
58) மாலை
59) பனி
60) யாமம்
61) முகை
62) வள்ளி
63) கோட்டுப்பூ
64) வாரி
65) பைங்கூழ்
66) கால்
67) காலை
68) நாமநீர்

## திருக்குறளில் உயிரினங்கள்

01. என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பிலதனை அறம். (குறள் : 77)

02. ஒருமையுள் **ஆமை** போல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் : 126)

03. வலியில் நிலைமையான் வல்லுருவம் **பெற்றம்**
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று. (குறள் : 273)

04. தவமறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. (குறள் : 274)

05. பகல் வெல்லும் **கூகையைக் காக்கை** இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (குறள் : 481)

06. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (குறள் : 490)

07. நெடும்புனலுள் வெல்லும் **முதலை** அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (குறள் : 495)

08. காலாழ் களரில் **நரி**யாடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. (குறள் : 500)

09. **காக்கை** கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள. (குறள் : 527)

10. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் **யானை**
வெரூஉம் **புலி**தாக் குறின். (குறள் : 599)

11. ஒலித்தக்கால் என்னாம் உவரி **எலிப்பகை**
நாகம் உயிர்ப்பக் கெடும். (குறள் : 763)

11A. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. (குறள் : 59)

12. கான முயலெய்த அம்பினில் **யானை**
பிழைத்த வேல் ஏந்தல் இனிது. (குறள் : 772)

13. கைவேல் **களிற்றொ**ரு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நடும். (குறள் : 774)

14. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன் உறைந்தற்று. (குறள் : 890)

15. மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (குறள் : 969)

16. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். (குறள் : 1066)

17. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. (குறள் : 1081)

18. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம் மூன்றும் உடைத்து. (குறள் : 1085)

19. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். (குறள் : 1087)

20. பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணி எவனோ ஏதில தந்து. (குறள் : 1089)

21. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (குறள் : 1120)

| | | | |
|---|---|---|---|
| 1) | புழு | 13) | நாகம் |
| 2) | ஆமை | 14) | முயல் |
| 3) | பெற்றம் | 15) | களிறு |
| 4) | புலி | 16) | கவரிமான் |
| 5) | புள் | 17) | ஆ |
| 6) | கூகை | 18) | மயில் |
| 7) | காக்கை | 19) | பிணை |
| 8) | கொக்கு | 20) | முதலை |
| 9) | அன்னம் | 21) | நரி |
| 10) | ஏறு | 22) | யானை |
| 11) | பகடு | 23) | எலி |
| 12) | குதிரை (மா) | 24) | பாம்பு |

22. மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. (குறள் : 624)

23. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. (குறள் : 758)

24. அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. (குறள் : 814)

25. கண்டது மன்னும் ஒருநாள் அவர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று. (குறள் : 1146)

# திருக்குறளில் உடல் உறுப்புகள்

01. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள் : 2)

02. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (குறள் : 3)

03. வேண்டுதல் வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. (குறள் : 4)

04. தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது. (குறள் : 7)

05. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. (குறள் : 8)

06. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (குறள் : 9)

07. பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேராதார். (குறள் : 10)

08. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற. (குறள் : 34)

09. அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (குறள் : 64)

10. மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்
சொற் கேட்டல் இன்பம் செவிக்கு. (குறள் : 65)

11. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன் கண்நீர் பூசல் தரும். (குறள் : 71)

12. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் : 72)

13. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. (குறள் : 73)

14. புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பிலவர்க்கு. (குறள் : 79)

15. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலர்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு. (குறள் : 80)

16. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். (குறள் : 84)

17. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (குறள் : 90)

18. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாம்
செம்பொருள் கண்டாரர் வாய்ச்சொல். (குறள் : 91)

19. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின். (குறள் : 92)

20. முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். (குறள் : 93)

21. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். (குறள் : 116)

22. யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (குறள் : 127)

23. தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. (குறள் : 129)

24. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு. (குறள் : 161)

25. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும். (குறள் : 169)

26. அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப்படும். (குறள் : 185)

27. தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயாது அடி உறைந் தற்று. (குறள் : 208)

28. இன்னாது இரக்கப்படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு. (குறள் : 224)

29. வசையிலா வன்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். (குறள் : 239)

30. அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல். (குறள் : 243)

31. படை கொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல் சுவை உண்டார் மனம். (குறள் : 253)

32. கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும். (குறள் : 260)

33. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (குறள் : 271)

34. வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன் நெஞ்சம்
தான் அறி குற்றப் படின். (குறள் : 272)

35. நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (குறள் : 276)

36. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. (குறள் : 277)

37. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். (குறள் : 278)

38. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (குறள் : 281)

39. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். (குறள் : 282)

40. அளவறிந்தார் நெஞ்சத்து அறம் போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. (குறள் : 288)

41. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். (குறள் : 293)

42. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (குறள் : 294)

43. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை. (குறள் : 295)

44. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும். (குறள் : 298)

45. சினத்தைப் பொருளென்று கொண்டவன்கேடு
நிலத்தறைந்தான் கை பிழையாதற்று. (குறள் : 307)

46. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (குறள் : 309)

47. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மானா செய்யாமை தலை. (குறள் : 317)

48. உயிர் உடம்பின் நீக்கியார் என்ப செயிர் உடம்பின்
செல்லாத் தீ வாழ்க்கை யவர். (குறள் : 330)

49. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற் சென்று செய்யப்படும். (குறள் : 335)

50. குடம்பை தனித்து ஒழியப் புள்பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. (குறள் : 338)

51. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. (குறள் : 340)

52. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை. (குறள் : 345)

53. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போ கூழால் தோன்றும் மடி. (குறள் : 371)

54. செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு. (குறள் : 389)

55. என் என்பஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு. (குறள் : 392)

56. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். (குறள் : 393)

57. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற் றற்று (குறள் : 402)

58. செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. (குறள் : 411)

59. செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும். (குறள் : 412)

60. செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து. (குறள் : 413)

61. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. (குறள் : 418)

62. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். (குறள் : 420)

63. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் : 423)

64. எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர்வாய்
நுண் பொருள் காண்பது அறிவு. (குறள் : 424)

65. மனத்தானாம் மாந்தர்க்குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல். (குறள் : 453)

66. மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு (குறள் : 454)

67. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (குறள் : 455)

68. மனந் தூயார்க் கெச்சம் நன்றாடும் இனந்தூயார்க்கு
இல்லை நன்றாகா வினை. (குறள் : 456)

69. மனநலம் மன்னுயிர்க்காக்கம் இனநலம்
எல்லாப்புகழும் தரும். (குறள் : 457)

70. மனநலம் நன்குடையராயினும் சான்றோர்க்கு
இன நலம் ஏமாப்புடைத்து. (குறள் : 458)

71. மனநலத்தின் ஆடும் மறுமை மற்றஃதும்
இனநலத்தின் ஏமாப்புடைத்து. (குறள் : 459)

72. செருநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் **தலை**. (குறள் : 488)

73. காலாழ் களரில் நரியடும் **கண்ணஞ்சா**
வேலாள் **முகத்த** களிறு. (குறள் : 500)

74. அருஞ்செவ்வி இன்னா **முகத்தான்** பெருஞ்செல்வம்
பேய்கண்டன்னது உடைத்து. (குறள் : 565)

75. பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல் **கண்** என்னாம்
கண்ணோட்டம் இல்லாத **கண்**. (குறள் : 573)

76. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத **கண்** (குறள் : 574)

77. **கண்ணு**க்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப்படும். (குறள் : 575)

78. மண்ணோடு இயைந்த மரத்தனையர் **கண்ணோ**டு
இயைந்து கண்ணோடதவர். (குறள் : 576)

79. கண்ணோட்டம் இல்லவர் **கண்ணி**லர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். (குறள் : 577)

80. **உள்ளம்** உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (குறள் : 592)

81. வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
**உள்ளத்** தனையது உயர்வு. (குறள் : 595)

82. **உள்ளம்** இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (குறள் : 598)

83. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
**உள்ளத்தின்** உள்ளக் கெடும். (குறள் : 622)

84. இலக்கம் **உடம்பி**டும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். (குறள் : 627)

85: நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யா நலத்து உள்ளதூஉம் அன்று. (குறள் : 641)

86. விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய் சோரா வன்க ணவன். (குறள் : 689)

87. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (குறள் : 706)

88. முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான் முந்துறும். (குறள் : 707)

89. முகம் நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். (குறள் : 708)

90. பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகையை உணர்வார்ப் பெறின். (குறள் : 709)

91. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லைபிற. (குறள் : 710)

92. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மையவர். (குறள் : 721)

93. முகநகநட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. (குறள் : 786)

94. உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (குறள் : 788)

95. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகம்நட்பு ஒரீஇ விடல். (குறள் : 830)

96. மையல் ஒருவன் களித்தற்றால் பேதை தன்
கையொன்று உடைமை பெறின். (குறள் : 838)

97. இளைது ஆக முள்மரம் கொல்க களையுநர்
கை கொல்லும் காழ்த்த விடத்து. (குறள் : 879)

98. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். (குறள் : 894)

99. நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். (குறள் : 917)

100. வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. (குறள் : 919)

101. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் கரி. (குறள் : 923)

102. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். (குறள் : 928)

103. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உனின். (குறள் : 942)

104. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற (குறள் : 1011)

105. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர் கொல் மாலும் என் நெஞ்சு. (குறள் : 1081)

106. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண். (குறள் : 1084)

107. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. (குறள் : 1088)

108. கொடும் புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண். (குறள் : 1086)

109. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில் (குறள் : 1087)

110. ஒண்ணுதற்கோ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும் என் பீடு. (குறள் : 1088)

111. இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய்நோக்கொன்று அந்நோய் மருந்து (குறள் : 1091)

112. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம் பாகம் அன்று பெரிது. (குறள் : 1092)

113. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒரு கண்
சிறகணித்தாள் போல நகும். (குறள் : 1095)

114. கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (குறள் : 1100)

115. தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிது சொல்
தாமரைக் கண்ணான் உலகு. (குறள் : 1103)

116. வேட்ட பொழுதின் அவையவை போலமே
தோட்டார் கதுப்பினாள் தோள். (குறள் : 1105)

117. உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். (குறள் : 1106)

118. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர் காணும் பூவொக்கும் என்று. (குறள் : 1112)

119. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு. (குறள் : 1113)

120. காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. (குறள் : 1114)

121. அனிச்சம்பூக் கால்களையான் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. (குறள் : 1115)

122. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். (குறள் : 1116)

123. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. (குறள் : 1117)

124. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. (குறள் : 1118)

125. மலரன்ன கண்ணாள் முகமொத்தியாயின்
பலர் காணத் தோன்றல் மதி. (குறள் : 1119)

126. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (குறள் : 1120)

127. பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் (குறள் : 1121)

128. உடம்போடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. (குறள் : 1122)

129. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். (குறள் : 1123)

130. கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர் எங் காதலவர். (குறள் : 1126)

131. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. (குறள் : 1127)

132. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. (குறள் : 1128)

133. நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. (குறள் : 1132)

134. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல் ஒல்லா பேதைக் கென் கண். (குறள் : 1136)

135. யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. (குறள் : 1140)

136. அலரெடி ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத்தால். (குறள் : 1141)

137. மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர். (குறள் : 1142)

138. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறை இறவா நின்ற வளை. (குறள் : 1157)

139. காமமும் நாணும் உயிர் காவாத் தூங்கும்என்
நோனா உடம்பினகத்து. (குறள் : 1163)

140. கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம் காட்ட யாம் கண்டது. (குறள் : 1171)

141. தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன். (குறள் : 1172)

142. பெயலாற்றா நீருலர்ந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என் கண் நிறுத்து. (குறள் : 1174)

143. படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்த என் கண். (குறள் : 1175)

144. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்த கண்
தாஅம் இதற்பட்டது. (குறள் : 1176)

145. உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். (குறள் : 1177)

146. பேணாது பெட்டார் உளர் மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண். (குறள் : 1178)

147. வாராக்கால் துஞ்சா வரின் துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். (குறள் : 1179)

148. மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறை பறை கண்ணா ரகத்து. (குறள் : 1180)

149. அவர் தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனி மேல் ஊரும் பசப்பு. (குறள் : 1182)

150. உவக்காண் எம்காதலர் செல்வார் இவர்காண் என்
மேனி பசப்பூர் வது. (குறள் : 1185)

151. பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின். (குறள் : 1189)

152. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு. (குறள் : 1199)

153. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சே! (குறள் : 1200)

154. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். (குறள் : 1204)

155. தம் நெஞ்சத்து எம்மைக்கடி கொண்டார் நாணார் கொல்
எம் நெஞ்சத்து ஓவாவரல் (குறள் : 1205)

156. மறப்பின் எவன் ஆவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். (குறள் : 1207)

157. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி. (குறள் : 1210)

158. கயல்உண் கண் யான் இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயர் உண்மை சாற்றுவேன் மன். (குறள் : 1212)

159. நனவினால் நல்காதவரைக் களவினால்
காண்டலின் உண்டென் உயிர். (குறள் : 1213)

160. துஞ்சும் கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்தவர் ஆவர் விரைந்து. (குறள் : 1218)

161. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். (குறள் : 1232)

162. தணந்தமை கால அறிவிப்ப போலும்
மணந்த நாள் வீங்கிய தோள். (குறள் : 1233)

163. பனை நீங்கிப் பைந்தொடி சேரும் துணை நீங்கித்
தொல்கவின் வாடிய தோள். (குறள் : 1234)

164. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். (குறள் : 1235)

165. தொடியோடு தோள் நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக் கூறல் நொந்து. (குறள் : 1236)

166. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியோர்க்கென்
வாடு தோள் பூசல் உரைத்து. (குறள் : 1237)

167. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். (குறள் : 1238)

168. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். (குறள் : 1239)

169. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. (குறள் : 1240)

170. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வ நோய் தீர்க்கும் மருந்து. (குறள் : 1241)

171. காதல் அவரிலர் ஆகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. (குறள் : 1242)

172. இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார் கண் இல். (குறள் : 1243)

173. கண்ணும் கொளச் சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க் காணல் உற்று. (குறள் : 1244)

174. செற்றார் எனக்கை விடல் உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅதவர். (குறள் : 1245)

175. கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க் காய்வு காய்தி என் நெஞ்சு. (குறள் : 1246)

176. காமம் விடு ஒன்றே நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன் இவ் விரண்டு. (குறள் : 1247)

177. பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதை என் நெஞ்சு. (குறள் : 1248)

178. உள்ளத்தார் காத லவராக உள்ளி நீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு. (குறள் : 1249)

179. துன்னத் துறந்தாரை நெஞ்சத்து உடையே மா
இன்னும் இழத்தும் கவின். (குறள் : 1250)

180. புலப்ப வெனச் சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு. (குறள் : 1259)

181. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். (குறள் : 1260)

182. வாள் அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாள் ஒற்றித் தேய்ந்த விரல். (குறள் : 1261)

183. இலங்கிழாய் இன்று மறப்பின் என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து. (குறள் : 1262)

184. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொடேறும் என் நெஞ்சு. (குறள் : 1264)

185. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும் என் மென்தோள் பசப்பு. (குறள் : 1265)

186. புலப்பேன் கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன் கொல்
கண் அன்ன கேளிர் வரின். (குறள் : 1267)

187. பெறின் என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின் என்னாம்
உள்ளம் உடைந்துக்கக்கால். (குறள் : 1270)

188. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவ தொன்று உண்டு. (குறள் : 1271)

189. கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண் நிறைந்த நீர்மை பெரிது. (குறள் : 1272)

190. நெருநற்றுச் சென்றார் எம் காதலர் யாமும்
எழ நாளேம் மேனி பசந்து. (குறள் : 1278)

191. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது. (குறள் : 1279)

192. பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. (குறள் : 1280)

193. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். (குறள் : 1283)

194. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. (குறள் : 1284)

195. எழுதும் கால்கோல் காணாக் கண்ணே போல் கொண்கன்
பழி காணேன் கண்ட இடத்து. (குறள் : 1285)

196. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. (குறள் : 1288)

197. அவர் நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன் நெஞ்சே
நீ எமக்கு ஆகா தது. (குறள் : 1291)

198. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅ ரெனச் சேறி என் நெஞ்சு. (குறள் : 1292)

199. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சே நீ
பெட்டாங்கு அவர்பின் செலல். (குறள் : 1293)

200. இனி அன்ன நின்னொடு சூழ்வார் யார் நெஞ்சே
துனி செய்து துவ்வாய் காண் மற்று. (குறள் : 1294)

201. பெறா அமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு. (குறள் : 1295)

202. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு. (குறள் : 1296)

203. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மட நெஞ்சிற் பட்டு. (குறள் : 1297)

204. எள்ளின் இளிவாம் என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. (குறள் : 1298)

205. துன்பத்திற்கு யாரோ துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. (குறள் : 1299)

206. தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி. (குறள் : 1300)

207. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து. (குறள் : 1305)

208. ஊடல் உணங்க விடுவாரொடு என் நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா. (குறள் : 1310)

209. பெண்ணியலார் எல்லோரும் கண்ணின் பொது உண்பர்
நண்ணேன் பரந்த நின் மார்பு. (குறள் : 1311)

210. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள். (குறள் : 1315)

211. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை. (குறள் : 1324)

212. தவறிலர் ஆயினும் தாம் வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து. (குறள் : 1325)

213. ஊடிப் பெறுகுலம் கொல்லோ நுதல் வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. (குறள் : 1328)

214. ஈர்ங்கை விதிரர் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லாத வர்க்கு. (குறள் : 1077)

215. அகடு ஆரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியால் மூடப்பட்டார். (குறள் : 936)

## உடலுறுப்பு வகைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) தாள் | 11) தோள் | 21) வயிறு | 30) முன்கை |
| 2) அடி | 12) யாக்கை | 22) வாய் | 31) இறை |
| 3) மனம் | 13) முகம் | 23) தலை | 32) மேனி |
| 4) கை | 14) உயிர் | | 33) விரல் |
| 5) செவி | 15) நா | 24) நுதல் | 34) மார்பு |
| 6) உடல் | 16) நெஞ்சம் | 25) புருவம் | 35) அகடு |
| 7) கண் | 17) அகம் | 26) கதுப்பு | |
| 8) என்பு | 18) மூக்கு | 27) நுசுப்பு | 36) மயிர் |
| 9) உடம்பு | 19) உள்ளம் | 28) எயிறு | |
| 10) உறுப்பு | 20) முலை | 29) கருமணிப்பாவை | |

216. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (964)

217. என்பு இலதனை வெயில் போலக் காயுமே
அன்பு இலதனை அறம். (77)

218. அன்பு அகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்து அற்று. (78)

## திருக்குறள் - சொற்பயன்பாடு - உலகம்

அறத்துப்பால் பாயிரம்

01. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே **உலகு**. (1) கடவுள் வாழ்த்து

02. வான்நின்று **உலகம்** வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று. (11) வான் சிறப்பு

03. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் **வியனுலகத்து**
உள்நின்று உடற்றும் பசி. (13) வான் சிறப்பு

04. நீர் இன்று அமையாது **உலகெனின்** யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு. (20) வான் சிறப்பு

05. தானம் தவம் இரண்டும் தங்கா வியன் **உலகம்**
வானம் வழங்கா தெனின். (19) வான் சிறப்பு

06. இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று **உலகு**. (23) நீத்தார் பெருமை

07. சுவைஒளி ஊறுஓசை நாற்மென்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே **உலகு**. (27) நீத்தார் பெருமை

இல்லறவியல்

08. பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிப்புப்
புத்தேளிர் வாழும் **உலகு**. (58) வாழ்க்கைத் துணைநலம்

09. கெடுவாக வையாது **உலகம்** நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. (117) நடுவுநிலைமை

10. **உலகத்தோடு** ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140) ஒழுக்கமுடைமை

11. கைமாறு வேண்டா கடப்பாடு மாரி மாட்டு
என் ஆற்றுங் கொல்லோ **உலகு**. (211) ஒப்புரவறிதல்

12. புத்தேள் **உலகத்தும்** ஈண்டும் பெறவரிதே
ஒப்புரவின் நல்ல பிற. (213) ஒப்புரவறிதல்

13. ஊரணி நீர் நிறைந்தற்றே **உலகவாம்**
பேரறி வாளன் திரு. (215) ஒப்புரவறிதல்

14. நல்லாறு எனினும் கொளல்நீது மே**லுலகம்**
இல்லெனினும் ஈதலே நன்று. (222) ஈகை

15. ஒன்றா **உலகத்து** உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். (233) புகழ்

16. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் **உலகு**. (234) புகழ்

துறவறவியல்

17. அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னா **உலகம்** புகல். (243) அருளுடைமை

18. அருளில்லார்க்கு அவ்**வுலகம்** இல்லை பொருளில்லார்க்கு
இவ்**வுலகம்** இல்லாகி யாங்கு. (247) அருளுடைமை

19. மழித்தலும் நீட்டலும் வேண்டா **உலகம்**
பழித்தது ஒழித்து விடின். (280) கூடாவொழுக்கம்

20. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் **உலகு**. (290) கள்ளாமை

21. உள்ளத்தால் பொய்யா தொழுகின் **உலகத்தார்**
உள்ளத்துள் எல்லாம் உளன். (294) வாய்மை

22. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்த இவ் **வுலகு**. (336) நிலையாமை

23. யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த **உலகம்** புகும். (346) துறவு

ஊழியல்

24. இரு வேறு **உலகத்து** இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலு:ம் வேறு. (274) ஊழ்

பொருட்பால் அரசியல்

25. இன்சொல்லால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன் சொலால்
தான்கண் டனைத்திலவ் **வுலகு**. (387) இறைமாட்சி

26. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் **உலகு**. (389) இறையாட்சி

27. தாமின் புதுவது **உலகின்** புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் (399) கல்வி

28. **உலகம்** தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. (425) அறிவுடைமை

29. எவ்வ துறைவது **உலகம்** உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (426) அறிவுடைமை

30. எள்ளாத எண்ணச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது **உலகு**. (470) தெரிந்து செயல் வகை

31. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது **உலகு**. (520) தெரிந்து விளையாடல்

32. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை **அதுவுலகத்து**
எப்பால் தூ லோர்க்கும் துணிவு. (533) பொச்சாவாமை

33. வானோக்கி வாழும் **உலகெல்லாம்** மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி. (542) செங்கோன்மை

34. கண்ணோட்டத் துள்ளது **உலகியல்** அஃதிலார்
உண்மை நிலைக்குப் பொறை. (572) கண்ணொட்டம்

35. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு (598) ஊக்கமுடைமை

அமைச்சியல்

36. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். (637) அமைச்சு

37. எனைத் திட்பம் எய்தியக்கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. (670) வினைத்திட்பம்

அங்கவியல்

38. உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் வையத்து
அலகையா வைக்கப்படும். (850) புல்லறிவாண்மை

39. பகைநட்பாக்கொண்டு ஒழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. (874) பகைத்திறம் தெரிதல்

ஒழிபியல்

40. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. (970) மானம்

41. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு. (994) பண்புடைமை

42. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
பண்புக்கு மாய்வது மன். (996) பண்புடைமை

43. பிறர் பழியும் தம்பழியும் நாணுவர் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு. (1015) நாணுடைமை

44. சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (1031) உழவு

45. உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. (1032) உழவு

46. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான். (1062) இரவச்சம்

காமத்துப்பால்

47. தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுசொல்
தாமரைக் கண்ணான் உலகு. (1103) புணர்ச்சி மகிழ்தல்

48. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்களார் இல். (1198) தனிப்படர் மிகுதி

## 5. நிலம்

அறத்துப்பால் பாயிரம்

01. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (3) கடவுள் வாழ்த்து

02. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும். (28) வான் சிறப்பு

இல்லறவியல்

03. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (151) பொறையுடைமை

04. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். (239) புகழ்

பொருட்பால் அரசியல்

05. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. (383) இறைமாட்சி

06. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லான் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (386) இறைமாட்சி

07. செவியுணவிற் கேள்வியுடையார் அவியுணவின்
அன்றாரோ டுஒப்பர் **நிலத்து**. (413) கேள்வி

08. **நிலத்தியல்**பால நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. (452) சிற்றினம் சேராமை

09. கடலோடா கல்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா **நிலத்து**. (496) இடன் அறிதல்.

10. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மா**நிலத்து** இல். (526) சுற்றந்தழாஅல்

11. குடிதழீஇச் கோலோச்சம் **மாநில** மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (544) செங்கோன்மை

12. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை **நிலக்கு**ப் பொறை. (570) வெகுவந்தி செய்யாமை

ஒழியியல்

13. **நிலத்தில்** கிடந்தமை கால் காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல். (959) குடிமை

14. சான்றவர் சான்றான்மை குன்றின் **இருநிலந்**தாள்
தாங்காது மள்ளோ பொறை. (990) சான்றாண்மை

15. ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்
தோற்றம் **நிலக்கும்** பொறை. (1003) நன்றியில் செல்வம்

16. செல்லான் கிழவன் இருப்பின் **நிலம்**புலந்து
இல்லாளின் ஊடி விடும். (1039) உழவு

17. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
**நில**மென்னும் நல்லாள் நகும். (1040) உழவு

காமத்துப்பால் களவியல்

18. யான் நோக்குங் காலை **நிலன்** நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும். (1094) குறிப்பறிதல்

19. காணிற் குவளை கவிழ்ந்து **நிலன்** நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. (1114) நலம்புனைந்துரைத்தல்

கற்பியல்

20. புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ **நிலத்**தொடு
நீரியைந் தன்னார் அகத்து. (1323) ஊடலுவகை

## 7. வையம்

அறத்துப்பால் பாயிரம்

01. துறந்தார் பெருமை துணைக்கூறின் **வையத்து**
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று. (22) நீத்தார் பெருமை

இல்லறவியல்

02. **வையத்துள்** வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். (50) இல்வாழ்க்கை

03. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப **வையகத்து**
இன்புற்றார் எய்தும சிறப்பு. (75) அன்புடைமை

04. செய்யாமல் செய்த உதவிக்கு **வையகமும்**
வானகமும் ஆற்றல் அரிது. (101) செய்நன்றியறிதல்

05. அறன் நோக்கி ஆற்றுங்கொல் **வையம்** புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. (189) புறங்கூறாமை

06. வசையென்ப **வையத்தார்க்** கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். (238) புகழ்

துறவறவியல்

07. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு **வையகத்தின்**
வானம் நனிய துடைத்து (353) மெய்யுணர்தல்.

பொருட்பால் அரசியல்

08. இறைகாக்கும் **வையக** மெல்லாம் அவனை
முறை காக்கும் முட்டாச் செயின் (547) செங்கோன்மை

09. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் **வையக்கு** அணி. (701) குறிப்பறிதல்

அங்கவியல்

10. உலகத்தார் உண்டு என்பது இல்என்பான் **வையத்து**
அலகையா வைக்கப்படும். (850) புல்லறிவாண்மை

11. கரப்பிலார் **வையகத்து** உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது. (1055) இரவு

## 8. ஞாலம்

அறத்துப்பால் இல்லறவியல்

01. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
**ஞாலத்தின்** மாணப் பெரிது. (102) செய்நன்றியறிதல்

02. பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை **ஞாலத்து**
அறம் பொருள் கண்டார்கள் இல். (141) பிறனில் விழையாமை

துறவறவியல்

03. அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா **ஞாலம்** கரி. (245) அருளுடைமை

பொருட்பால்

04. **ஞாலம்** கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். (484) காலம் அறிதல்.

அரசியல்

05. காலம் கருதி இருப்பர் கலங்காது
**ஞாலம்** கருது பவர். (485) காலம் அறிதல்

06. துளியின்மை **ஞாலத்திற்கு** எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. (557) கொடுங்கோன்மை

அமைச்சியல்

07. விரைந்து தொழில் கேட்கும் **ஞாலம்** நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648) சொல்வன்மை

ஒழியியல்

08. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு **ஞாலம்**
பகலும் பாற் பட்டன்று இருள். (999) பண்புடைமை

09. இரப்பாரை இல்லாயின் ஈரிங்கண் மா **ஞாலம்**
மரப்பாவை சென்றுவந் தற்று. (1058) இரவு




Evergreen Printers, Jaffna. T.P.: 021 - 2219893